# நம்பிக்கையின் எழுச்சி

# a Thrill of Hope



திருவருகைக் காலம் முதல் கிறிஸ்து பிறப்பு வரையிலான
சிந்தனைப் புத்தகம் 2025-26 (ஆண்டு A)


ONE
Office for the
New Evangelisation

செப்டம்பர் மாதம் 2013-ஆம் ஆண்டு -இல் தொடங்கப்பட்ட, புது நற்செய்தி அறிவிப்புக்கான அலுவலகம் (Office for the New Evangelisation - ONE), சிங்கப்பூர் ரோமன் கத்தோலிக்க உயர் மறைமாவட்டத்தின் ஓர் அங்கமாகச் செயல்படுகிறது. இதன் நோக்கம், நற்செய்தியை அறிவிப்பதும் மற்றும் மறைபரப்பு செய்யும் திருச்சபையாக உருவெடுப்பதும் ஆகும்.

நற்செய்தி அறிவிப்புக்கான உந்து சக்தியாக விளங்கும், ONE-இன் பணி, சிங்கப்பூர் உயர் மறைமாவட்டத்திற்குள் புதிய வழிகளில் நற்செய்தி அறிவிப்பு முயற்சிகளை வழிநடத்தி, ஒரு நற்செய்தி அறிவிப்பு இயக்கத்தை நடத்துகிறது.

GIVING IN FAITH & THANKFULNESS
GIFT
CATHOLIC FOUNDATION SINGAPORE

இந்த முன்முயற்சி, கத்தோலிக்க அறக்கட்டளையின் கீழ் செயல்படும் GIFT திட்டத்தால் ஆதரிக்கப்படுகிறது.






# பொருளடக்கம்


- திருவருகைக் காலம் முதல் கிறிஸ்து பிறப்பு வரையிலான செய்தி
- இந்த நூலின் நோக்கம்
- இந்த நூலை எவ்வாறு பயன்படுத்துவது
- குழுச் சிந்தனையை எளிதாக்குதல்

- திருவருகைக் கால ஞாயிற்றுக்கிழமைகள் (ஆண்டு A)
- தயாரிப்பு காலத்தின் முதல் ஞாயிறு
- தயாரிப்பு காலத்தின் இரண்டாம் ஞாயிறு
- தயாரிப்பு காலத்தின் மூன்றாம் ஞாயிறு
- தயாரிப்பு காலத்தின் நான்காம் ஞாயிறு

- கிறிஸ்து பிறப்பு பெருவிழாக்கள் (ஆண்டு A)
- கிறிஸ்து பிறப்பு நாள், ஆண்டவரின் பிறப்பு
- கன்னி மரியாள், கடவுளின் தாய் பெருவிழா
- ஆண்டவரின் திருக்காட்சிப் பெருவிழா

- பின்னிணைப்பு - செயல்பாடுகள்



# நம்பிக்கையின் எழுச்சி

இறை மக்களே,

உணவு, உடை, இருப்பிடம் போன்ற அத்தியாவசிய தேவைகளுக்கான பொருள்கள் எப்போதுமே விலை ஏறிக்கொண்டேதான் இருக்கின்றன என்பதை நீங்கள் கவனித்திருக்கலாம். அவை ஒருபோதும் குறைவதில்லை. இவை உயர்ந்து கொண்டே செல்வதற்கு பெரும்பாலும் பேராசையே காரணம். இன்னும் அதிகமாக வேண்டும் என்ற எண்ணமே இதற்குப் பின்னால் இருக்கிறது.

நமது ஆன்மிக வாழ்வும் இதேபோல் மேல்நோக்கிப் பயணிப்பதாகவே இருக்க வேண்டும். ஏனெனில், இயேசு, "உங்கள் விண்ணகத் தந்தை நிறைவுள்ளவராய் இருப்பதுபோல நீங்களும் நிறைவுள்ளவர்களாய் இருங்கள்" (மத்தேயு 5:48) என்று கூறுவதன் மூலம் இதையே நம்மிடம் எதிர்பார்க்கிறார். " நீங்கள் தூயவராயிருங்கள் . ஏனெனில் நான் தூயவன்" (1 பேதுரு 1:16) என்ற அழைப்பிலும் இந்த நிறைவுக்கான தேவை வலியுறுத்தப்பட்டுள்ளது. விண்ணகத் தந்தையைப் போல நிறைவாகவோ, தூய்மையாகவோ இருப்பது இயலாத காரியம் என்று நாம் எண்ணலாம்.

இதை அறிந்திருந்தும், தூய்மையில் தொடர்ந்து வளர உறுதிபூண்டு இருப்பது, அந்த விலைவாசி உயர்வைப் போலவே நமது வாழ்வின் பாதையையும் மேல்நோக்கி அமைப்பதாகும். நமது வாழ்வில் நாம் கொண்டிருக்கும் தூய்மையே நமது தொடக்கப் புள்ளி. இந்தத் திருவருகைக் காலத்தில் நாம் நம்மையே உற்று நோக்க வேண்டும். விலைவாசி எப்படி உயர்கிறதோ, அதேபோல நமது ஆன்மிக வாழ்வும் உயர வேண்டும். நாம் இன்னும் தூய்மையாக இருக்க முயற்சி செய்ய வேண்டும். நமது இதயம் மற்றும் ஆன்மாவில், இன்னும் பயணிக்காத மற்றும், அறியப்படாத புதிய இடங்களுக்குச் செல்ல நாம் முயற்சி செய்ய வேண்டும். அந்த இடங்கள் இறுதியில் நம்மை ஆண்டவரிடம் இன்னும் நெருக்கமாக கொண்டு வரும்.நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து மனிதராகி, கடவுளிடம் இன்னும் நெருக்கமாக மனிதனால் செல்ல முடியும் என்று நமக்குக் காட்டினார்.

நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் பிறப்புக்குத் தயாராகும் இந்த காலம், உங்களுக்கு அர்த்தமுள்ளதாக அமைய வாழ்த்துகிறேன்.

*அருள் தந்தை. தெரன்ஸ் பெரெய்ரா*

*புது நற்செய்தி அறிவிப்புக்கான தலைமை ஆணையர்*

# இந்த நூலின் நோக்கம்

இந்த நூல், குடும்பங்கள், RCIA குழுக்கள், பங்குக் குழுக்கள், திருஅவையின் தொண்டூழிய குழுக்கள் மற்றும் சிறிய கிறிஸ்தவ சமூகங்களுக்காக உருவாக்கப்பட்டது. தனிப்பட்ட சிந்தனைக்கும் இதை பயன்படுத்தலாம். இதன் நோக்கம்

கிறிஸ்தவ சமூகத்தை, இறைவார்த்தையைக் கேட்டு, அதை நடைமுறைப்படுத்தும் இடமாக மேம்படுத்துவது.

- பங்கேற்பாளர்களுக்கு சமூக அனுபவத்தையும், அண்டை வீட்டார் மற்றும் தேவையில் உள்ளவர்களை சந்திப்பதன் மூலமும் அவர்களுக்கு பணியுணர்வையும் அளிப்பது.
- கிறிஸ்துவை என்றும் மையத்தில் வைத்து, பங்குகளிலுள்ள குழுக்களையும், திருஅவையின் தொண்டூழியர்களையும் ஒன்றாக கூட்டி, அனைவரும் ஒன்றித்து செபிப்பதும், குடும்ப உறுப்பினர்களிடையே தொடர்பை மேம்படுத்துவதும் ஆகும்.

அன்பே அனைத்து தொடர்புகளுக்கும் முக்கிய செய்தியாக இருக்க வேண்டும். எனவே, இந்த அமர்வுகளில் குடும்பத்தினர் தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளவும், அர்த்தமுள்ள செயல்பாடுகளை ஒன்றிணைந்து செய்யவும், நம்பிக்கையைப் பகிர்ந்து கொள்ளவும், ஒருவருக்கொருவர் ஒப்புரவாகவும் வாய்ப்புகள் அளிக்கப்படும்.

# இந்த நூலை எவ்வாறு பயன்படுத்துவது?

இந்தச் சிந்தனைகள், ஞாயிற்றுக்கிழமை திருப்பலியில் கலந்துகொள்வதற்கு முன், இறைவார்த்தையைப் பெற்றுக்கொள்ளத் தயாராகும் வகையிலும், அல்லது திருப்பலிக்குப்பின், இறைவார்த்தையை நமது வாழ்வில் ஆழமாகப் புரிந்துகொள்ளும் வகையிலும் பயன்படுத்தலாம். முழு மனதுடன், குழு உறுப்பினர்கள் முன்கூட்டியே முன்வந்து விவிலியப் பகுதிகள் மற்றும் பிற வாசகங்களைப் படிக்கலாம்.

ஒவ்வொரு அமர்விலும் ஒருவர் பொறுப்பேற்று அமர்வை நடத்தலாம். இந்த பொறுப்பு, நேரத்தைக் கண்காணித்து, அனைவரையும் பங்கேற்க அழைப்பு விடுப்பதோடு முடிந்துவிடுகிறது

கூறப்பட்ட கருத்துக்களை ஒருவர் குறித்து வைத்துக் கொண்டு, அமர்வில் கலந்து கொள்ளாதவர்களுக்கு மின்னஞ்சல் மூலம் அனுப்பி வைக்கலாம். ஒவ்வொரு அமர்வும் சுமார் இரண்டு மணி நேரம் நடைபெறும். அடுத்த சந்திப்புக்கான நேரமும் இடமும் ஒவ்வொரு அமர்வின் முடிவிலும் அறிவிக்கப்பட வேண்டும்.

# அமர்வின் வடிவம்

1

### தொடக்கச்செபம்

இறைவார்த்தையை ஒருவருக்கொருவர் திறந்த மனதுடன் ஏற்கவும், சிந்திக்கவும், தொடக்கச் செபத்தைச் செபித்து, தொடக்கப் பாடலைப் பாடுவார்கள்..

2

### வாசகங்கள்

மூன்று விவிலிய வாசகங்களையும் குறைந்தது இரண்டு முறை வாசிக்க வேண்டும். வாசிக்கும் போது அமைதியாகக் கேட்க சிறிது நேரம் கொடுக்கப்பட வேண்டும்.

பின்னர், கொடுக்கப்பட்ட விளக்கங்களைப் பயன்படுத்தி, தலைவர் அல்லது அமர்வை நடத்துபவர் வாசகங்களை விளக்கலாம். இதற்கு, தலைவர் அல்லது நடத்துபவர் கூட்டத்திற்கு முன்பாக அவற்றைப் படித்துப் புரிந்துகொள்ள பரிந்துரைக்கப்படுகிறது.

3

### சிந்தனைகள்

இந்த பகுதியில் வாரத்தின் வாசகங்கள் குறித்த நமது சிந்தனைகளை ஆழப்படுத்துவதற்காக ஒருவர் படிக்கிறார். சிந்தனைக்கு போதுமான நேரம் அளிக்கப்பட வேண்டும்.

4

### பகிர்வதற்கான வினாக்கள்

இந்தப் பகுதியில், தனிப்பட்ட மற்றும் குழுவின் சூழலுக்கு ஏற்ப பகிர்தலுக்காகப் பிரிக்கப்பட்டுள்ளது. குழுப் பகிர்தல், சிறிய கிறிஸ்தவ சமூகங்கள், திருஅவையின் தொண்டூழியர்கள் அல்லது குடும்பம் போன்ற குறிப்பிட்ட சூழல்களின் அடிப்படையில் பகிர்தல்களை ஊக்குவிக்கும் நோக்கம் கொண்டது. இந்த வினாக்களைப் பற்றி சிந்திக்கவும், ஒவ்வொருவரும் பதிலளிக்கவும் நேரம் கொடுக்கப்பட வேண்டும்.

5

### நம்அன்றாட பணிகளுக்கு திரும்பும் போது

கூட்டாகவோ அல்லது தனிப்பட்ட முறையிலோ, இறைவார்த்தை நம்மை எப்படி ஒரு குறிப்பிட்ட செயலின் மூலம் பதிலளிக்க அழைக்கிறது என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

6

### நிறைவுச் செபம்

அமர்வின் முடிவில், அனைவரும் சேர்ந்து செபிப்பர். ஒவ்வொருவரும் பங்கேற்பாளர்களுக்காகவும் பின்னர் சமூகத்திற்காகவும் செபிப்பார்கள்.

7

### பின்னிணைப்பு: செயல்பாடுகள்

இந்தப் பகுதியில், கிறிஸ்துவில் நமது சகோதர சகோதரிகளுடன் நமது ஆன்மிகப் பயணத்தை மேலும் செழுமைப்படுத்தும் செயல்பாடுகள் உள்ளன,

# குழுச் சிந்தனையை எளிதாக்குதல்

நாம் இயேசுவின் பெயரில் கூடும் போது, அது வெறும் சந்திப்பு மட்டுமல்ல-நாம் கிறிஸ்துவை நம் மத்தியில் அழைப்பதாகும். உங்கள் குழு நேரத்தை அர்த்தமுள்ளதாகவும், செபம் நிறைந்ததாகவும் மாற்ற உதவும் சில எளிமையான அணுகுமுறைகளும் நடைமுறைகளும் இங்கே உள்ளன.

### முழுமையாய் இருங்கள்

*"ஏனெனில், இரண்டு அல்லது மூன்று பேர் என் பெயரின் பொருட்டு எங்கே ஒன்றாகக் கூடியிருக்கின்றார்களோ அங்கே அவர்களிடையே நான் இருக்கிறேன்" - மத்தேயு* 18:20.

உண்மையிலேயே நம்மோடு இருக்கிறார் என்பதை நினைவில் கொள்ளுங்கள். பயபக்தியுடன் பேசுங்கள், கேளுங்கள். விவிலிய வாசகங்களையோ, செபங்களையோ படிக்கும்போது நிதானமாகப் படியுங்கள். உங்கள் எண்ணத்தில் மட்டுமல்லாமல், உங்கள் இதயத்தாலும் முழுமையானப் பங்கேற்பாளராக இருங்கள்..

### அனைவரையும் சேர்த்துக் கொள்ளுங்கள்

*" தந்தையே, நீர் என்னுள்ளும் நான் உம்முள்ளும் இருப்பதுபோல் அவர்களும் ஒன்றாய் இருப்பார்களாக"!* யோவான் 17:21.

ஒவ்வொருவரையும் அன்புடன் வரவேற்று, புதிய உறுப்பினர்களுக்கு அந்நிய உணர்வு ஏற்படாதவாறு உதவுங்கள். எளிய, தெளிவான மொழியைப் பயன்படுத்துங்கள். யாரும் புறக்கணிக்கப்பட்டதாக உணராதபடி அனைவரையும் வாசிக்கவும், பகிரவும் அழையுங்கள்.

### கனிவுடன் இருங்கள்

*"பிற இனத்தவரிடையே தலைவர்கள் எனக் கருதப்படுகிறவர்கள் மக்களை அடக்கி ஆளுகிறார்கள். அவர்களுள் பெரியவர்கள் அவர்கள் மீது தங்கள் அதிகாரத்தைக் காட்டுகிறார்கள். ஆனால், உங்களிடையே அப்படி இருக்கக் கூடாது." மாற்கு 10:42-43.*

ஆசிரியரைப் போலவும், நீண்ட உரைகளை வழங்குவதையும் தவிர்க்கவும். மற்றவர்களை உங்களுடன் ஒப்புக்கொள்ள வற்புறுத்த வேண்டாம். எளிமையாகவும், பணிவாகவும் பேசுங்கள். ஒருவர் மட்டுமே உரையாடலில் ஆதிக்கம் செலுத்தாமல், அனைவரும் பகிர நேரம் கொடுங்கள்..

### கிறிஸ்துவை மையத்தில் வையுங்கள்

*"என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தம் சிலுவையை நாள்தோறும் தூக்கிக் கொண்டு என்னைப் பின்பற்றட்டும்." - லூக்கா 9:23.*

நமது சிந்தனையின் மையத்தில் இறைவார்த்தையும், இயேசுவைப் பின்பற்றுவதற்கான அழைப்பும் இருக்க வேண்டும். குழு தலைப்பை விட்டு விலகத் தொடங்கினால், கடவுள் இன்று நமக்கு என்ன சொல்கிறார் என்பதை நோக்கி மெதுவாக கவனத்தை மீண்டும் கொண்டு வாருங்கள்.

### அதிகமாகத் திட்டமிடாதீர்கள்

*"ஏனெனில், நீங்கள் பேசவேண்டியவற்றைத் தூய ஆவியார் அந்நேரத்தில் உங்களுக்குக் கற்றுத் தருவார்." - லூக்கா 12:*

ஒவ்வொரு பகிர்தலையும் முன்கூட்டியே திட்டமிட வேண்டியதில்லை. பொறுமையுடன் காத்திருந்து, சரியான நேரத்தில் பேச ஒருவரைத் தூய ஆவியானவர் தூண்டுவார் என நம்புங்கள். ஒருவர் பகிரும்போது, அதை ஒரு வரமாகக் கருதி நன்றி சொல்லுங்கள்.

# கத்தோலிக்கSG வானொலி

2025-2026 ஆம் ஆண்டுக்கான திருவருகைக் காலம் முதல் கிறிஸ்து பிறப்பு வரையிலானசிந்தனைப் புத்தகத்தின் ஒலி வடிவத்தை **கத்தோலிக்கSG வானொலி** உங்களுக்கு வழங்குகிறது

எங்கள் தொகுப்பாளர்களுடன் இணைந்து, நவம்பர் 27, 2025 முதல் ஆண்டவரின் திருக்காட்சிப் பெருவிழா வரை, கத்தோலிக்கSG வானொலி செயலி வழியாக இந்தச் சிந்தனைகளைக் கேட்கலாம்

| Live broadcast |
| --- |
| Thursdays at 8am |
| Same day encore at 9pm |

| Repeat broadcasts | | | |
| --- | --- | --- | --- |
| 8.00am | 11.45am | 3.45pm | 9.00pm |
| each day from Friday to Monday | | | |

Listen now via **radio.catholic.sg** or as podcast on Spotify!
Access the Spotify playlist by scanning the following QR code:

| Podcast Versions |
| --- |
| The same சிந்தனைகள் will be available as podcasts on the app itself. |

# HOW CAN WE SERVE YOU BETTER?

**THANK YOU FOR USING THIS BOOKLET!**

We hope that these *சிந்தனைகள்* will help you and your community to grow in faith. As you journey through it, we'd love to hear your thoughts.

Does this booklet meet your expectations?
What else would you like to see in future booklets?
Your feedback is important to us.

Let us know how we can improve!

**SCAN ME**

one.org.sg/feedback

(ஆண்டு A)

# திருவருகைக் கால ஞாயிற்றுக்கிழமைகள்

**முதல் ஞாயிறு**

எசாயா 2:1-5;
உரோமையர் 13:11-14;
மத்தேயு 24:37-44

**இரண்டாம் ஞாயிறு**

எசாயா 11:1-10;
உரோமையர் 15:4-9 ;
மத்தேயு 3:1-12

**மூன்றாம் ஞாயிறு**

எசாயா 35:1-6,10 ;
யாக்கோபு 5:7-10;
மத்தேயு 11:2-11

**நான்காம் ஞாயிறு**

எசாயா 7:10-14 ;
உரோமையர் 1:1-7 ;
மத்தேயு 1:18-24



# திருவருகைக் காலத்தின் முதல் ஞாயிறு

## தொடக்கச் செபம்

*அனைவரும் சேர்ந்து தொடக்க செபத்தை செபித்து, தொடக்கப் பாடலை பாடுவார்கள். இது இறைவார்த்தைக்கு ஒருவருக்கொருவர் திறந்த மனதுடனும் இருப்பதை வளர்க்கும்.*

ஆண்டவரே இயேசுவே,

உம்முடைய பெயரால் நாங்கள் கூடும்போது, நீர் எங்களுக்கு நம்பிக்கை அளிக்கிறீர். உம்முடைய வார்த்தை, உம் வழிகளைப் பற்றி எங்கள் மனதைத் திறக்கிறது, உம்முடைய வழிநடத்துதலைக் கேட்க எங்கள் இதயங்களுக்கு உதவுகிறது, மேலும் உம்முடைய அன்பில் வளர எங்களை வழிநடத்துகிறது. நீர் எப்போதும் "இம்மானுவேல், நம்மோடிருக்கும் கடவுள்" என்ற நம்பிக்கை, உம்முடைய அருளால் எங்களுக்குக் கிடைக்கிறது. எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

ஆமென்..

# வாசகங்கள்

*மூன்று விவிலிய வாசகங்களையும், அவற்றின் விளக்கங்களையும் உரக்கப் படிக்க வேண்டும். சிறிது நேரம் அமைதியாகச் சிந்திக்க வாய்ப்பு கொடுக்கப்பட வேண்டும்.*

*அடுத்து, அமர்வின் தலைவர் அல்லது நடத்துபவர், கொடுக்கப்பட்டுள்ள விளக்கங்களைக் கொண்டு வாசகங்களை விளக்குவார். தலைவர் அல்லது நடத்துபவர் கூட்டத்திற்கு முன் அவற்றைப் படித்துப் புரிந்துகொள்வது பரிந்துரைக்கப்படுகிறது.*

## விளக்கங்கள்:

### முதல் வாசகம்:

**எசாயா 2:1-5**

திருவருகை தயாரிப்புக் காலம், மனம்மாறி ஆண்டவரை நோக்கி நாம் எவ்வாறு பயணிக்கிறோம் என்பதைப் பற்றி சிந்திக்க ஒரு சிறப்புமிக்க நேரம். இஸ்ரயேலை ஆண்டவரிடம் மீண்டும் கொண்டுவர முயற்சிக்கும்போது எசாயா இதை வலியுறுத்துகிறார். மனமாற்றம், போருக்குப் பயன்படுத்தும் கருவிகளை ஆக்கப்பூர்வமான கருவிகளாக மாற்றுவது போன்ற சிறந்த மாற்றங்களை உறுதியளிக்கிறது. நமது விசுவாச வாழ்வில் ஏற்றத்தாழ்வுகள் இருந்தாலும், நாம் ஆண்டவருக்காகச் செய்த அடிப்படை மாற்றங்களை உறுதியாகப் பிடித்துக்கொண்டு, அவரை நெருக்கமாகப் பின்தொடர முயற்சிக்கும் வழிகளை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

### இரண்டாம் வாசகம்:

**உரோமையர் 13:11-14**

நீண்ட நாட்களுக்குப் பிறகு நாம் வீட்டிற்குத் திரும்பும்போது, சில சமயங்களில் பூசண வாசனையும், அடைபட்ட காற்றும் நம்மை வரவேற்கலாம். நாம் முதலில் செய்வது, ஜன்னல்களைத் திறந்து காற்றும் வெளிச்சமும் உள்ளே வர அனுமதிப்பதுதான். நம் ஆன்மிக வாழ்விலும் நாம் அவ்வாறே செய்ய வேண்டும் என புனித பவுல் நமக்கு நினைவூட்டுகிறார். நமது விசுவாசத்தில் தளர்ச்சி அடைய நம்மை அனுமதிக்காமல், நம் தந்தை கடவுளிடமிருந்து நம்மை விலக்கி வைக்கும் தீய பழக்கங்களைக் கைவிட வேண்டும். இந்த தயாரிப்புக் காலம், ஆன்மிகத் துப்புரவு செய்வதற்கு ஒரு அற்புதமான வாய்ப்பு.

### நற்செய்தி:

***மத்தேயு 24:37-44***

காத்திருத்தல் என்பது மிகவும் சிரமமாக இருக்கலாம். ஆண்டவர் நம்மை அழைக்கும் இந்தக் காத்திருப்பு இன்னும் கடினமானது. ஏனெனில், அவர் எப்போது திரும்பி வருவார் என்பதை அறியாமல் நாம் தொடர்ந்து விழிப்புடன் இருக்க வேண்டும். இந்தக் காலம் நமக்கு மிகுந்த சோர்வை ஏற்படுத்தும். ஆனால், இது நமது விசுவாச வாழ்வை எப்படி வாழ்கிறோம் என்பதைப் பார்க்கவும், ஆண்டவரைப் பெற்றுக்கொள்ள நமது இதயங்களை தொடர்ந்து தயார்படுத்தவும் ஒரு சரியான அழைப்பாகவும் இருக்கலாம்..

## சிந்தனைகள்

*மற்றொருவர் இந்த பகுதியை வாசிக்க வேண்டும். இது வாரத்தின் வாசகங்கள் குறித்த நமது சிந்தனைகளை ஆழப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது. சிந்தனைக்கு போதுமான நேரம் அளிக்கப்பட வேண்டும்).*

நல்ல திட்டமிடுதல் மற்றும் தயாரித்தல் பற்றி நிறைய சொல்லலாம். குறிப்பாக பெரிய நிகழ்வுகள் அல்லது திட்டங்களுக்குத் தயாராகும்போது,நல்ல தயாரிப்புகள் நிகழ்வுகள் சீராக நடைபெற உதவுகின்றன. எனவே நாம் சரியான திட்டமிடல் மற்றும் மேம்பாட்டில் பெரிய அளவிலான முயற்சியை முதலீடு செய்கிறோம். "திட்டமிடத் தவறினால், தோல்விக்குத் திட்டமிடுகிறீர்கள்" என்ற பிரபலமான ஒரு பழமொழியும் உள்ளது. நாம் தோல்வி பயத்தினால், அனைத்து சாத்தியமான எதிர்பாராத சூழ்நிலைகளுக்கும் தயாராக இருக்கிறோம் என்ற உணர்வால் பாதுகாப்பைத் தேடுகிறோம்.

இந்த வாதம், திருவருகைக் காலத்தின் தொடக்கத்தில் நம்மிடம் கேட்கப்படும் தயாரிப்பிற்கும் பொருந்துமா? நமது தயாரிப்புக்கான உந்துதல் பயத்திலிருந்து வந்தால், இது திட்டமிடலின் ஒரு எதிர்மறையான பார்வை. நற்செய்தியின் வழியில் பார்க்கும்போது, அறியாமையால் நாம் தயாரிப்பு காலத்தில் சென்றால் அது பயத்தை தூண்டுவதாகும் ,மாறாக ஆண்டவருக்கான தயாரிப்பு அப்படி அல்ல. நாம் முன்னெடுக்கும் இந்த தயாரிப்பு, ஒரு மகிழ்ச்சியான எதிர்பார்ப்பைக் கொண்டதாகும். .

அதாவது, ஆண்டவர் வருவதை நம்பிக்கையுடன் எதிர்நோக்குவதாகும். இது ஆண்டவரைப் பற்றிய நமது அறிவிலும், நமது வாழ்வில் அவரது உண்மையான அனுபவத்தையும்  அடித்தளமாகக் கொண்டது. தோல்விக்கான பயம் அல்லது எதிர்மறையான விளைவுகளால் நமது செயல்கள் தூண்டப்படும்போது, நமது மனநிலை பெரிதும் மாறுகிறது. ஆனால், நாம் ஆழ்ந்து நேசிக்கும் ஒருவரை வரவேற்க மகிழ்ச்சியுடன் தயாராகும்போது அது முற்றிலும் மாறுபட்டது.

இது இரண்டாவது வகையான தயாரிப்பு. இது நம்பிக்கையின் மகிழ்ச்சியை வெளிப்படுத்துகிறது. வரவிருக்கும் வாரங்களில் நம்மோடு ஆண்டவரின் பிரசன்னம் இருக்கும் என்ற மகிழ்ச்சியை நாம் எதிர்பார்க்கிறோம். இந்த தயாரிப்பு காலத்தில், நம் தந்தை கடவுள் நம்மை ஆச்சரியப்படுத்துவதற்கு நாம் அனுமதிக்கும்போது, நம்பிக்கையினால் வரும் இந்த மகிழ்ச்சிக்கு நாம் நம்மை ஒப்படைப்போம். நாம் எதிர்பார்த்ததை விட அதிகமான அருளை அவர் நமக்குத் தருவார்

## பகிர்வதற்கான வினாக்கள்:

இந்தப் பகுதி தனிப்பட்ட மற்றும் குழுவின் சூழலுக்கு ஏற்ப பகிர்தலுக்காகப் பிரிக்கப்பட்டுள்ளது. குழுப் பகிர்தல், சிறிய கிறிஸ்தவ சமூகங்கள், *திருஅவையின் தொண்டூழியர்கள்* அல்லது குடும்பம் போன்ற குறிப்பிட்ட சூழல்களின் அடிப்படையில் பகிர்தல்களை ஊக்குவிக்கும் நோக்கம் கொண்டது. இந்த வினாக்களைப் பற்றி சிந்திக்கவும், ஒவ்வொருவரும் பதிலளிக்கவும் நேரம் கொடுக்கப்பட வேண்டும்.

### தனிப்பட்ட சிந்தனை மற்றும் பகிர்வதற்கான வினாக்கள்

கீழே உள்ள வினாக்களைப் பற்றி அனைவரும் அமைதியாகச் சிந்திக்கவும். நீங்கள் ஒரு குழுவில் இருந்தால், உங்கள் சிந்தனைகளைப் பகிர்ந்து கொள்ளலாம்

உங்கள் சூழலுக்கு ஏற்ப பின்வரும் வினாக்களில் ஒன்றைப் பற்றி சிந்திக்கலாம். விவிலிய வாசகங்களில் உங்களைத் தாக்கியது என்ன, மேலும் ஒரு சமூகம் / திருஅவையின் தொண்டூழியர்கள் / குடும்பமாக நாம் இறைவார்த்தையை எவ்வாறு பகிரலாம் என்பதைப் பற்றி பேசலாம்

1. உங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தந்த ஒரு செயலுக்கு நீங்கள் தயாரான நேரத்தைப் பற்றி சிந்தியுங்கள். அந்த தயாரிப்பில் ஆண்டவர் எவ்வாறு உடனிருந்தார்?

2. கிறிஸ்து பிறப்புக்கு நாம் தயாராகும்போது, நமது இதயங்களை எவ்வாறு தயார் செய்கிறோம்? இந்தக் காத்திருப்பு காலத்தில் நாம் எதை மாற்ற வேண்டும்?

### குழு சூழலுக்கு ஏற்ப பகிர்வதற்கான வினாக்கள்

*உங்கள் சூழலுக்கு ஏற்ப பின்வரும் வினாக்களில் ஒன்றைப் பற்றி சிந்திக்கலாம்*

*சிறிய கிறிஸ்தவ சமூகங்களுக்கு*

மனமாற்றம் என்பது ஒரு தனிப்பட்ட முயற்சி மட்டுமல்ல, நாம் ஒரு சமூகமாக ஒன்றாக வாழ்வதும் ஆகும். இந்த பயணத்தில் நாம் ஒருவருக்கொருவர் எவ்வாறு ஆதரவளிக்கிறோம், மேலும் ஒரு சமூகமாக நாம் எவ்வாறு கடவுளிடம் திரும்புகிறோம்?

*திருஅவையின் தொண்டூழியர்களுக்கு*

திட்டமிடுதல் திருஅவையின் தொண்டூழியர்களுக்கு அத்தியாவசியமானது, ஆனால் நமது தயாரிப்புகளில் ஆண்டவரை ஈடுபடுத்துவதும் அதே அளவு முக்கியமானது. இதன்மூலம் அவர் நாம் செல்ல விரும்பும் இடத்திற்கு நம்மை வழிநடத்துவார். இயேசு நம் திட்டங்களின் ஒரு பகுதியாக இருப்பதை நாம் எவ்வாறு உறுதிப்படுத்தலாம் ?

*குடும்பங்களுக்கு*

ஒரு குடும்பமாக, இந்த தயாரிப்பு காலத்தில் நமது வழக்கமான நடைமுறைகளுக்கு அப்பால் சென்று, ஆண்டவர் இயேசுவைப் பெற்றுக்கொள்ள நாம் எவ்வாறு திட்டமிடலாம்?

### உங்கள் பங்களிப்பு

*இயேசுவின் நற்செய்தியை மற்றவர்களுக்குப் பகிர்ந்துகொள்ள, நீங்கள் மேற்கொள்ளும் முயற்சி.*

தயாரிப்பு காலம், கிறிஸ்து பிறப்புக்கு முன் வரும் ஒரு அழகான எதிர்பார்ப்பின் காலம். இப்போது நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?

நம் தந்தை கடவுள் அனைவரையும் நேசிக்கிறார், அந்த அன்பின் வெளிப்பாடு, அவரது மகனை அனைவருக்கும் அனுப்புவது என்பதை ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்வதற்காகவே கிறிஸ்து பிறப்பு.

கிறிஸ்து பிறப்பு காலத்தில் பயன்படுத்தப்படும் குறியீடுகளின் பொருளைக் கற்றுக்கொள்ளுங்கள் (பின்னிணைப்பைப் பார்க்கவும்).

## நிறைவுச் செபம்

*அமர்வின் முடிவில், அனைவரும் சேர்ந்து செபிப்பார்கள். ஒவ்வொருவரும் பங்கேற்பாளர்களுக்காகவும் பின்னர் சமூகத்திற்காகவும் செபிப்பார்கள்.*

ஆண்டவரே,

உம்முடைய பிரசன்னத்திற்காக நாங்கள் உமக்கு நன்றி கூறுகிறோம். நாங்கள் பிரிந்து செல்லும் போது, இந்த பகிர்வுகள் மற்றும் விவாதங்கள், நம்பிக்கையில் வளர எங்களுக்கு உதவும். உம்முடைய வாக்குறுதிகளில் நாங்கள் நம்பிக்கை வைக்கவும், மேலும் உம்முடைய அழைப்பிற்கு இணங்க எங்கள் வாழ்க்கையை மாற்றியமைக்கவும் எங்களுக்கு உதவும். ஆண்டவரே, உம்மை நேசிப்பதிலிருந்து வரும் நம்பிக்கையின் மகிழ்ச்சியை நாங்கள் எப்போதும் அனுபவிக்கும்படி எங்களை உம்மிடம் நெருக்கமாக வைத்திருப்பீராக. எங்கள் ஆண்டவரும், நம்பிக்கையுமாகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

ஆமென்

# நமதுசிந்தனை

2025-26 திருவருகைக் காலத்தின் முதல் ஞாயிறு

சிந்தனைப் புத்தகம்



# திருவருகைக் காலத்தின் இரண்டாம் ஞாயிறு

## தொடக்கச் செபம்

*அனைவரும் சேர்ந்து தொடக்க செபத்தை செபித்து, தொடக்கப் பாடலை பாடுவார்கள். இது இறைவார்த்தைக்கு ஒருவருக்கொருவர் திறந்த மனதுடனும் இருப்பதை வளர்க்கும். .*

கடவுளின் மகனாகிய இயேசு கிறிஸ்துவே,

நீர் எங்களில் ஒருவரானீர். நீர் மனிதனாக எங்களுடன் சேர்ந்து, நாங்கள் இருக்கும் இடத்திற்கே வந்தீர். "இம்மானுவேல், கடவுள் நம்மோடு இருக்கிறார்!" என்று அறிக்கை செய்ய நீர் கிருபை புரிந்ததற்காக நாங்கள் உம்மைப் புகழ்கிறோம். இந்த தயாரிப்பு காலத்தின் வழியாக எங்கள் பயணம் நம்பிக்கையில் நிறைந்ததாக இருக்கும் என்பதை நாங்கள் அறிவோம். ஏனெனில், நீர் மட்டுமே இவ்வுலகில் எங்கள் நம்பிக்கை. எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

ஆமென்.

## வாசகங்கள்

*மூன்று விவிலிய வாசகங்களையும், அவற்றின் விளக்கங்களையும் உரக்கப் படிக்க வேண்டும். சிறிது நேரம் அமைதியாகச் சிந்திக்க வாய்ப்பு கொடுக்கப்பட வேண்டும்.*

*அடுத்து, அமர்வின் தலைவர் அல்லது நடத்துபவர், கொடுக்கப்பட்டுள்ள விளக்கங்களைக் கொண்டு வாசகங்களை விளக்குவார். தலைவர் அல்லது நடத்துபவர் கூட்டத்திற்கு முன் அவற்றைப் படித்துப் புரிந்துகொள்வது பரிந்துரைக்கப்படுகிறது.*

***விளக்கங்கள்:***

***முதல் வாசகம்***

### *எசாயா* 11:1-10

இந்த வாரம், அசீரியப் பேரரசால் யூதா தேசத்திற்கு அச்சுறுத்தல் ஏற்பட்ட ஒரு காலத்தில் எழுதப்பட்ட எசாயாவின் இறைவாக்கை செவிமடுத்தோம். மக்கள் பாதுகாப்பின்மையும் குழப்ப உணர்வாலும் நிறைந்திருந்தனர். இறைவாக்கினர் எசாயா மெசியாவை குறித்து, இறைவாக்கு உரைப்பதன் மூலம் புதிய தொடக்கங்களுக்கான நம்பிக்கையை அளித்தார்: ஈசாய் என்னும் அடிமரத்திலிருந்து தளிர் ஒன்று துளிர்விடும்;அதன் வேர்களிலிருந்து கிளை ஒன்று வளர்ந்து கனிதரும் (எசா *11:1*), என்ற வாக்குறுதி இயேசுவில் நிறைவேறியது. தாவீதின் வம்சத்திலிருந்து ஒருவர் என்றென்றும் ஆட்சி செய்வார் என்று கடவுள் அளித்த இந்த வாக்குறுதி, "தாவீது உடன்படிக்கை" என்றும் அறியப்படுகிறது. ஆனால் இந்த ஆட்சி, போரினால் அல்ல, சமாதானத்தினால் அமையும்..

***இரண்டாம் வாசகம்:***

### *உரோமையர்* 15:4-9

இப்பகுதியை புனித பவுல் உரோமையில் வாழ்ந்த ஆரம்பகால கிறிஸ்தவ சமூகத்திற்கு எழுதினார். அங்கு யூதர்களுக்கும் பிற இனத்தவருக்கும் (யூதர் அல்லாதவர்கள்) இடையே எழுந்த பதட்டங்களை அவர் கையாள விரும்பினார். அவர்களிடையே வேறுபாடுகள் இருந்தபோதிலும், அவர்கள் அனைவரும் நம் தந்தை கடவுளின் பிள்ளைகள் என்ற பொதுவான அடையாளத்தால் பிணைக்கப்பட்ட ஒரே மக்கள் என்று அவர் அவர்களுக்கு நினைவூட்டினார். கிறிஸ்தவர்களாக, அவர்கள் நம்பிக்கையில் வளர வேண்டும் மேலும் நம் தந்தை கடவுள் முதலில் அவர்களை நேசித்ததால், சமாதானத்திலும் ஒற்றுமையிலும் வாழ்ந்து அதை வெளிப்படுத்த வேண்டும். எனவே, புனித பவுல் அவர்களை நம்பிக்கையான விடாமுயற்சியின் மூலம் தங்கள் வாழ்க்கையால் ஆண்டவரை மகிமைப்படுத்தவும், சமாதானமாக (ஒன்றிணைந்து வாழ்ந்து) ஒற்றுமையுடன் இருக்கவும் அறிவுறுத்தினார்.

***நற்செய்தி:***

### *மத்தேயு* 3:1-12

திருமுழுக்கு யோவானின் போதனையின் அடிப்படை கொள்கை மனமாற்றமாகும்: இது மிகவும் தேவையான மற்றும் முழுமையான மனமாற்றத்திற்கான அழைப்பு. "மனமாற்றம்" என்ற சொல் கிரேக்க வார்த்தையான metanoeō-இலிருந்து வருகிறது. இதன் பொருள் மனதையும் இதயத்தையும் மாற்றுவதாகும். திருமுழுக்கில் நீரில் கழுவப்படுவது பழைய பாவ வாழ்வில் இறந்து, நம் தந்தை கடவுளில் புதிய வாழ்வுக்கு மீண்டும் பிறப்பதை குறிக்கிறது.
மக்கள் எதை மாற்ற அழைக்கப்பட்டுள்ளனர்? அவர்கள் தங்கள் முழு மனதுடன் இயேசு கிறிஸ்துவை நோக்கித் திருப்ப வேண்டும். அவரே நம்பிக்கையின் மற்றும் சமாதானத்தின் நிறைவு. விண்ணரசும் அவராலே முழுமை பெறுகிறது என்பதை உணர வேண்டும்.

## சிந்தனைகள்

*மற்றொருவர் இந்த பகுதியை வாசிக்க வேண்டும். இது வாரத்தின் வாசகங்கள் குறித்த நமது சிந்தனைகளை ஆழப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது. சிந்தனைக்கு போதுமான நேரம் அளிக்கப்பட வேண்டும்*

மூன்று வாசகங்களும் சவாலான சூழ்நிலைகளுக்கு மத்தியில் நம்பிக்கை மற்றும் சமாதானத்தைப் பற்றி பேசுகின்றன. இந்த தயாரிப்பு காலத்தில், நாமும், எதிர்மறையான உண்மைகளை புரிந்துக் கொள்ள அழைக்கப்பட்டுள்ளோம்: நமது வாழ்வின் குழப்பமான நேரங்களில் உறுதியாக இருந்து, இன்னும் நம்பிக்கை மற்றும் சமாதானத்துடன் வாழ அழைக்கப்படுகிறோம். முதல் வாசகத்தின் சூழல் போர் வரவிருக்கும் நேரம். மக்கள் தங்களுக்கு வெற்றி தேடித் தரும் ஒரு வலிமையான அரசனுக்காக நம்பிக்கையுடன் இருந்தனர். மாறாக, இயேசுவின் ஆட்சி சமாதானம், நீதி, இணக்கம் மற்றும் நேர்மையை உள்ளடக்கியது. நம்மில் பலர் நம் தந்தை கடவுளின் ஆட்சியை வலிமையுடன் தொடர்புபடுத்துகிறோம். "ஓநாய் செம்மறியாட்டுக் குட்டியோடு தங்கியிருக்கும்" (எசா 11:6) என்பதைப் போல, இயேசு ஒரு வல்லமை மிக்க அரசராகவும், ஏழைகளின் மீது அன்பு கொண்டவராகவும் ,தாழ்ச்சி நிறைந்த ஊழியராகவும் இருக்கிறார் என்பதை நாம் ஏற்றுக்கொள்ள அழைக்கப்பட்டுள்ளோம். இரண்டாவது வாசகம், நமது வேறுபட்ட சூழ்நிலைகளுக்கு இடையில், சமாதானம் மற்றும் ஒற்றுமையின் பாதையைத் தேர்ந்தெடுக்க நம்மை ஊக்குவிக்கிறது. ஏனெனில் நாம் அனைவரும் " கிறிஸ்து இயேசுவின் முன்மாதிரிக்கேற்ப நீங்கள் ஒரே மனத்தினராய் இருக்குமாறு மன உறுதியையும் ஊக்கத்தையும் தரும் கடவுள் உங்களுக்கு அருள்புரிவாராக" (உரோ 15:5) என்ற பொதுவான நம்பிக்கையில் பிணைக்கப்பட்டுள்ளோம். ஆரம்பகால கிறிஸ்தவ சமூகங்களில் இருந்த பதட்டங்களும் மோதல்களும் இன்றைய நமது உறவுகளில் உள்ளன. எனவே, புனித பவுல், ஒருவருக்கொருவர் நேசிப்பதற்குத் தேவையான சமாதானம், கிறிஸ்துவில் நமது நம்பிக்கையிலிருந்து உருவாக வேண்டும் என்பதை நமக்கு நினைவூட்டுகிறார். நாம் நம்பிக்கையுடன் நேசிக்கவும், ஒருவருக்கொருவர் சமாதானத்துடன் இருக்கவும் தேர்ந்தெடுக்கும் ஒவ்வொரு நேரமும், நாம் இயேசுவை நமது வாழ்க்கையில் வரவேற்கிறோம்..

நற்செய்தியில், திருமுழுக்கு யோவானின் வீரியமான மற்றும் நேரடியான மனமாற்றத்திற்கான அழைப்பு, கிறிஸ்துவின் வருகையை ஒட்டி உருவாகிறது. இந்த புனிதமான காலத்தில், நாமும் மனம்மாறி, நம் முழு மனதையும் இயேசுவிடம் திருப்ப அழைக்கப்பட்டுள்ளோம். அவரே நம்பிக்கை மற்றும் சமாதானம். இத்தகைய எதிர்பார்ப்பு, நம் ஆண்டவர் இயேசுவைப் பற்றிய நமது தற்போதைய பிம்பத்தை நேர்மையாக ஆய்வு செய்வதன் மூலமும் புதுப்பிப்பதன் மூலமும் வெளிப்படுத்தப்படுகிறது. மேலும், வெளிப்புற சூழ்நிலைகளைப் பொருட்படுத்தாமல் ஒருவரையொருவர் நேசிப்பதன் மூலமும் வெளிப்படுகிறது.

## பகிர்வதற்கான வினாக்கள்:

இந்தப் பகுதி தனிப்பட்ட மற்றும் குழுவின் சூழலுக்கு ஏற்ப பகிர்தலுக்காகப் பிரிக்கப்பட்டுள்ளது. குழுப் பகிர்தல், சிறிய கிறிஸ்தவ சமூகங்கள், திருஅவையின் தொண்டூழியர்கள் அல்லது குடும்பம் போன்ற குறிப்பிட்ட சூழல்களின் அடிப்படையில் பகிர்தல்களை ஊக்குவிக்கும் நோக்கம் கொண்டது. இந்த வினாக்களைப் பற்றி சிந்திக்கவும், ஒவ்வொருவரும் பதிலளிக்கவும் நேரம் கொடுக்கப்பட வேண்டும்.

### தனிப்பட்ட சிந்தனை மற்றும் பகிர்வதற்கான வினாக்கள்

*கீழே உள்ள வினாக்களைப் பற்றி அனைவரும் அமைதியாகச் சிந்திக்கவும்.*

*நீங்கள் ஒரு குழுவில் இருந்தால், உங்கள் சிந்தனைகளைப் பகிர்ந்து கொள்ளலாம்*

- உங்கள் வாழ்க்கையில் சாத்தியமற்றதாகத் தோன்றும் எதிர்மறையான உண்மைகள் என்ன?
- உங்கள் வாழ்க்கையில் இந்த எதிர்மறையான உண்மைகளைச் சமாளிக்க உங்களுக்குத் தேவையான மனமாற்றம் என்ன?

### குழு சூழலுக்கு ஏற்ப பகிர்வதற்கான வினாக்கள்

*உங்கள் சூழலுக்கு ஏற்ப பின்வரும் வினாக்களில் ஒன்றைப் பற்றி சிந்திக்கலாம். விவிலிய வாசகங்களில் உங்களைத் தாக்கியது என்ன, மேலும் ஒரு சமூகம் / திருஅவையின் தொண்டூழியர்கள் / குடும்பமாக நாம் இறைவார்த்தையை எவ்வாறு பகிரலாம் என்பதைப் பற்றி பேசலாம்.*

*சிறிய கிறிஸ்தவ சமூகங்களுக்கு*

உங்கள் சமூகத்தில் என்னென்ன பதட்டங்கள் உள்ளன? அமைதியைக் கொண்டுவரக்கூடிய நம்பிக்கையான மாற்றங்கள் என்ன?

*திருஅவையின் தொண்டூழியர்களுக்கு*

நமது திருஅவையின் தொண்டுகளில் பிரிவினையை உருவாக்கும் இலக்குகள் உள்ளதா? கடவுளிடம் திரும்பி, ஒன்றாகப் பதிலளிக்க நாம் எவ்வாறு அழைக்கப்படுகிறோம்?

*குடும்பங்களுக்கு*

எந்தெந்த காயங்கள் அல்லது விரக்திகள் நமது குடும்பம் சமாதானமாகவும் நம்பிக்கையுடனும் வாழ்வதைத் தடுக்கிறது?

### உங்கள் பங்களிப்பு

*இயேசுவின் நற்செய்தியை மற்றவர்களுக்குப் பகிர்ந்துகொள்ள, நீங்கள் மேற்கொள்ளும் முயற்சி.*

இந்த தயாரிப்பு காலம் மற்றும் கிறிஸ்து பிறப்பு குறியீடுகளின் அர்த்தத்தை நீங்கள் இப்போது கண்டுபிடித்ததால், அவற்றை உங்கள் கூட்டத்தில் பகிர்ந்து கொள்ளுங்கள். மேலும், அவர்களுக்கு அர்த்தமுள்ள குறியீடுகளைச் சேர்க்க மற்றவர்களை அழைக்கவும்.


## நிறைவுச் செபம்

*அமர்வின் முடிவில், அனைவரும் சேர்ந்து செபிப்பார்கள். ஒவ்வொருவரும் பங்கேற்பாளர்களுக்காகவும் பின்னர் சமூகத்திற்காகவும் செபிப்பார்கள்.*

ஆண்டவரே, கிறிஸ்து பிறப்புக்குத் தயாராகும் இந்த நேரத்தில்,நாங்கள் மோதல்களுக்கும் இணக்கமின்மைக்கும் மத்தியில் இருக்கிறோம். உம்முடைய வார்த்தை எங்களுக்கு சமாதானத்தை அளிக்கிறது. அந்த சமாதானம் எங்கள் இதயங்களுக்குள் ஏற்படும் மாற்றத்திலிருந்து வருகிறது. ஆண்டவரே, நீர் அளிக்கும் சமாதானம் எங்கள் திறன்களுக்கு அப்பாற்பட்டது அல்ல. சமாதானம் நமக்குள்ளிருந்து தொடங்குகிறது என்றும், இந்த சமாதானத்தை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள நாம் அழைக்கப்பட்டுள்ளோம் என்றும் உம்முடைய வார்த்தை எங்களுக்குக் கற்றுக்கொடுக்கிறது. அத்தகைய ஞானத்தையும், வழிகாட்டுதலையும் அளித்ததற்காக ஆண்டவரே, உமக்கு நன்றி. உம்முடைய மிக புனிதமான மற்றும் விலையேறப்பெற்ற பெயரால் உம்மை மன்றாடுகிறோம்.

ஆமென்.

## சிந்தனைப் புத்தகம்



# திருவருகைக் காலத்தின் மூன்றாம் ஞாயிறு

### தொடக்கச் செபம்

*அனைவரும் சேர்ந்து தொடக்க செபத்தை செபித்து, தொடக்கப் பாடலை பாடுவார்கள். இது இறைவார்த்தைக்கு ஒருவருக்கொருவர் திறந்த மனதுடனும் இருப்பதை வளர்க்கும்..*

அன்பும், கருணையும் நிறைந்த தந்தைய இந்த மகிழ்ச்சியின் ஞாயிறன்று (Gaudete Sunday), உம்முடைய நன்மையையும், வியத்தகு அன்பையும் முன்னிட்டு உம்மைப் புகழ்கிறோம். எங்கள் இதயங்கள் மகிழ்ச்சியால் நிரம்பி உள்ளன. எங்கள் வாழ்க்கையில் கடினமான மற்றும் சோர்வு நிறைந்த பகுதிகள் உள்ளன, அங்கே நீர் உம்முடைய அருளைப் பொழிந்து, அனைத்தையும் புதியதாக்குவீர். நாங்கள் பலவீனமானவர்கள், ஆனால் நீர் எங்களை தைரியத்தாலும் பொறுமையாலும் நிரப்பி, உம்முடைய வரவிருக்கும் அரசில் எங்கள் நம்பிக்கையைப் புதுப்பிப்பீர். உம்முடைய மகிமையின் அறிகுறிகள், சிறிய விஷயங்களில் கூட, உம்முடைய விசுவாசத்தின் நினைவூட்டல்களாக எங்களைச் சுற்றிலும் இருக்கட்டும். நாங்கள் நன்றியுள்ளவர்களாக வாழவும், உம்மால் நேசிக்கப்படுகிறோம் என்பதை அறிந்து வளரவும்,எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம்.
ஆமென்

## வாசகங்கள்

*மூன்று விவிலிய வாசகங்களையும், அவற்றின் விளக்கங்களையும் உரக்கப் படிக்க வேண்டும். சிறிது நேரம் அமைதியாகச் சிந்திக்க வாய்ப்பு கொடுக்கப்பட வேண்டும்.*

*அடுத்து, அமர்வின் தலைவர் அல்லது நடத்துபவர், கொடுக்கப்பட்டுள்ள விளக்கங்களைக் கொண்டு வாசகங்களை விளக்குவார். தலைவர் அல்லது நடத்துபவர் கூட்டத்திற்கு முன் அவற்றைப் படித்துப் புரிந்துகொள்வது பரிந்துரைக்கப்படுகிறது..*

### *விளக்கங்கள்:*

### *முதல் வாசகம்:*
**எசாயா 35:1-6,10**

நம் தந்தை கடவுளின் வாக்குறுதி, இயேசுவின் பிறப்பில் நிறைவேறுவதைக் காணும் பயணத்தின் மையப்பகுதியை நாம் அடைந்துள்ளோம். நாம் காத்திருக்கும் காலம் நீண்டு கொண்டே போகும் போது நாம் சோர்ந்து போகலாம்; நமது மனஉறுதி சிறிது குறையலாம், மேலும் பொறுமையின்மையும், கவலையும் நம்மிடம் வரலாம். இருப்பினும், குழப்பமான காலங்களில் எசாயா இஸ்ரயேலை தேற்றுவது போலவே, நாம் பொறுமையுடன் நிலைத்திருக்க ஊக்குவிக்கப்படுகிறோம். இதற்கு தைரியம் என்ற வரத்தையும், நம் நம்பிக்கையின் அடித்தளமான நம் தந்தை கடவுளின் அன்பையும் சார்ந்து இருக்கிறோம். "கடவுள் வருகிறார்" என்பதை நாம் உறுதியாக அறிவோம். நாம் மனமுடைந்து போகும்போது, "ஏனெனில் கடவுளால் இயலாதது ஒன்றுமில்லை" (லூக்கா 1:37) என்று கபிரியேல் தூதர் இறைவாக்கு உரைத்ததை எசாயா நமக்கு நினைவூட்டுகிறார்.

### *இரண்டாம் வாசகம்:*
**யாக்கோபு 5:7-10**

நம் தந்தை கடவுள், தமது திட்டங்களை சரியான நேரத்தில் வெளிப்படுத்துவார் என்று புனித யாக்கோபு போதிக்கிறார். ஒரு விவசாயி தனது அறுவடையை வெறுமனே எதிர்பார்ப்பதில்லை, ஆனால் எத்தகைய சூழ்நிலைகளிலும் அவர் கடினமாக உழைத்து அறுவடையை எதிர்நோக்கி இருக்கிறார். சரியான நேரத்தில் இறைவனின் ஆசியால் உழைப்பின் பலன்களை அவர் பெறுவார் என்று அவர் நம்புகிறார். இதேபோல், நாமும் செயலாக்கத்துடனும், விழிப்புடனும், உலகத்தால் திசைதிருப்பப்படாமல் காத்திருக்க அழைக்கப்படுகிறோம். நாம் நமது இதயங்களை, விசுவாசத்தாலும் நம்பிக்கையாலும் ஆழப்படுத்த அழைக்கப்படுகிறோம். உடனடியாக பலன்கள் இல்லாவிட்டாலும், நிலத்தை உழும் விவசாயியைப் போல, நாம் கண்ணால் பார்ப்பதை விட விசுவாசத்துடன் பார்த்து, விடாமுயற்சியுடன் இருக்கிறோம். திருவருகைக் காலப் பயணம், புனிதமான காத்திருப்பு நித்திய பலன்களைத் தரும் என்று நமக்குக் கற்றுக்கொடுக்கிறது.

### *நற்செய்தி:*
**மத்தேயு 11:2-11**

நாம் அனைவரும் சந்தேகத்தின் தருணங்களை எதிர்கொள்கிறோம். திருமுழுக்கு யோவான் சிறையில் இருந்தபோது இதை உணர்ந்திருக்க வாய்ப்புள்ளது. அவரது கேள்விக்கு இயேசுவின் பதில் நேரடியாக இல்லை: அதற்கு பதிலாக அவர் தனது செயல்களைச் சுட்டிக்காட்டினார். இது நமது, முதல் வாசகத்தில் உள்ள எசாயாவின் இறைவாக்கை நிறைவேற்றுகிறது. இது பிலிப்புவுக்கு இயேசு அளித்த பதிலுக்கு ஒத்திருக்கிறது. "என் செயல்களின் பொருட்டாவது என்னை நம்புங்கள்" (யோவான் 14:11). பெரும்பாலும், நமது எதிர்பார்ப்புகள் நம்மை வரம்புக்குள் வைக்கின்றன, ஆனால் இயேசு எதிர்பாராத வழிகளில் நம் தந்தை கடவுளின் பணியை அங்கீகரிக்கவும், அதற்கு அப்பால் பார்க்கவும் நம்மை அழைக்கிறார். விசுவாசம் சோதிக்கப்படும்போதும், எதிர்காலம் தெளிவாக இல்லாதபோதும், அவர் நம் வாழ்வில் எவ்வாறு செயல்பட்டார் என்பதை நினைவுபடுத்தி, நம் நம்பிக்கையை வலுப்படுத்த இயேசு நம்மை அழைக்கிறார்.

## சிந்தனைகள்

*மற்றொருவர் இந்த பகுதியை வாசிக்க வேண்டும். இது வாரத்தின் வாசகங்கள் குறித்த நமது சிந்தனைகளை ஆழப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது. சிந்தனைக்கு போதுமான நேரம் அளிக்கப்பட வேண்டும்*

*இந்த ஞாயிறு, "மகிழ்ச்சியின் ஞாயிறு" (Gaudete Sunday) என்றும் அழைக்கப்படுகிறது. காத்திருப்பு காலத்தில் நாம் தொடர்ந்து பயணம் செய்யும்போது மகிழ்ச்சியடைய நம்மை அழைக்கிறது. இந்த மகிழ்ச்சி, நம் தந்தை கடவுள் தமது வாக்குறுதிகளைக் காப்பாற்றுகிறார் என்ற நமது நம்பிக்கையின் அடிப்படையில் அமைந்துள்ளது. அவரது வழிகள் நம் வழிகளாக இல்லாமல் இருக்கலாம் (எசா 55:8), இருப்பினும், நமது வாழ்வில் அவரது அன்பை அனுபவிப்போம் என்ற உறுதியால் நாம் உற்சாகமடைகிறோம்*

*இரண்டாம் வாசகத்தில், புனித யாக்கோபு ஆண்டவருக்காகக் காத்திருக்க நமக்குக் கற்றுக்கொடுக்கிறார். உங்கள் நம்பிக்கை சோதிக்கப்படும் போது மனவுறுதி உண்டாகும் என்பது உங்களுக்குத் தெரியும். (யாக் 1:3). "ஆண்டவரின் வருகை விரைவில் இருப்பதால்" நாம் ஆர்வத்துடனும் தயாரிப்புடனும் காத்திருக்கிறோம். நாம் நமது இதயங்களை தயார் படுத்துகிறோம், கவனச்சிதறல்களை நீக்கி, மீண்டும் ஆண்டவரை நோக்கித் திரும்புகிறோம். இது ஒரு கவலையான காத்திருப்பு அல்ல, மாறாக எதிர்நோக்கு மற்றும் நம்பிக்கையில் வேரூன்றியது.*

*நற்செய்தியில், திருமுழுக்கு யோவான் சிறையிலிருந்து இயேசுவின் அடையாளத்திற்கான உறுதிப்படுத்தலைத் தேடுகிறார். இயேசு தனது செயல்களின் ஆதாரத்துடன் பதிலளிக்கிறார்: குருடர்கள் பார்க்கிறார்கள், கால் ஊனமுற்றவர்கள் எழுந்து நடக்கிறார்கள், தொழுநோயாளிகள் குணப்படுத்தப்படுகிறார்கள், இறந்தவர்கள் உயிர்த்தெழுப்பப்படுகிறார்கள், ஏழைகள் நற்செய்தியைக் கேட்கிறார்கள். எசாயாவின் இறைவாக்குகள், நமது விசுவாசத்தை உறுதிப்படுத்தும் நமது மெசியா கிறிஸ்துவில் நிறைவேறுகின்றன. சந்தேகம் அல்லது இருளில் கூட, அவருடைய மீட்பின் கரத்தை நாம் அடையாளம் காண முடியும். இந்த வாசகங்கள், நாம் இயேசுவின் வருகைக்காகக் காத்திருக்கும்போது, மகிழ்ச்சியான நம்பிக்கையை வெளிப்படுத்த நம்மை அழைக்கின்றன. " நீங்கள் எதிர்நோக்கி இருப்பதைக் குறித்து யாராவது விளக்கம் கேட்டால் விடையளிக்க நீங்கள் எப்பொழுதும் ஆயத்தமாய் இருங்கள் "(1 பேதுரு 3:15) . இந்த நம்பிக்கை களைப்படைந்தவர்களை வலுப்படுத்துகிறது, பலவீனமான இதயங்களை உறுதிப்படுத்துகிறது, மேலும் கைதிகளுக்கு விடுதலை அளிக்கிறது. இது, இத்தகைய கடவுளின் அரசில் இப்போதும் நாம் நம்பிக்கையால் ஈர்க்கப்பட்டு வருகிறோம்.*

## பகிர்வதற்கான வினாக்கள்:

*இந்தப் பகுதி தனிப்பட்ட மற்றும் குழுவின் சூழலுக்கு ஏற்ப பகிர்தலுக்காகப் பிரிக்கப்பட்டுள்ளது. குழுப் பகிர்தல், சிறிய கிறிஸ்தவ சமூகங்கள், திருஅவையின் தொண்டூழியர்கள் அல்லது குடும்பம் போன்ற குறிப்பிட்ட சூழல்களின் அடிப்படையில் பகிர்தல்களை ஊக்குவிக்கும் நோக்கம் கொண்டது. இந்த*

### தனிப்பட்ட சிந்தனை மற்றும் பகிர்வதற்கான வினாக்கள்

கீழே உள்ள வினாக்களைப் பற்றி அனைவரும் அமைதியாகச் சிந்திக்கவும். நீங்கள் ஒரு குழுவில் இருந்தால், உங்கள் சிந்தனைகளைப் பகிர்ந்து கொள்ளலாம். விவிலிய வாசகங்களில் உங்களைத் தாக்கியது என்ன, மேலும் நீங்கள் இறைவார்த்தையை மற்றவர்களுடன் எவ்வாறு பகிரலாம் என்பதைப் பற்றி பேசலாம்

- எனது வாழ்க்கையில் உள்ள பதட்டங்களைத் தீர்த்து, ஆண்டவருடன் இன்னும் தெளிவாக நடக்க எவ்வாறு முடியும்?
- இந்த பதட்டங்களைத் தீர்க்க நான் செய்ய வேண்டிய வாழ்க்கையை மாற்றும் முடிவு என்ன?

### பகிர்வதற்கான வினாக்கள்

உங்கள் சூழலுக்கு ஏற்ப பின்வரும் வினாக்களில் ஒன்றைப் பற்றி சிந்திக்கலாம்

*சிறிய கிறிஸ்தவ சமூகங்களுக்கு*

நாம் ஆண்டவருக்காகக் காத்திருக்கும்போது, நாம் எதை விட்டுக்கொடுத்துள்ளோம், மேலும் எந்த மாற்றங்கள் நமக்கு மகிழ்ச்சியையும் நம்பிக்கையையும் தருகின்றன?

**திருஅவையின் தொண்டூழியர்களுக்கு**

நாம் திரு அவைக்கு செய்யும் தொண்டுகள் மக்களை கடவுளிடம் திரும்ப எவ்வாறு உதவுகிறது?மேலும் இந்த மாற்றத்தைக் காட்டும் அறிகுறிகள் என்ன?

**குடும்பங்களுக்கு**

நமது குடும்பங்கள் செய்ய விரும்பும் மாற்றங்களுக்கு நாம் எவ்வாறு உதவி செய்கிறோம்?

### உங்கள் பங்களிப்பு

*இயேசுவின் நற்செய்தியை மற்றவர்களுக்குப் பகிர்ந்துகொள்ள, நீங்கள் மேற்கொள்ளும் முயற்சி.*

இந்த திருவருகைக் காலம் மற்றும் கிறிஸ்து பிறப்பு குறியீடுகளில் குறைந்தது மூன்றை நீங்களே செய்யுங்கள். யூடியூபில் உள்ள எளிய வழிகாட்டிகளை நீங்கள் பின்பற்றலாம். நீங்கள் அவற்றை உருவாக்கும்போது, இன்னும் திருமுழுக்கு பெறாத மூன்று நபர்களை செபத்தில் மனதில் வைத்து, நீங்கள் உருவாக்கும் ஒவ்வொரு குறியீட்டுடனும் அவர்களை மனதில் கொள்ளுங்கள்.

### நிறைவுச் செபம்

*அமர்வின் முடிவில், அனைவரும் சேர்ந்து செபிப்பார்கள்.*
*ஒவ்வொருவரும் பங்கேற்பாளர்களுக்காகவும் பின்னர் சமூகத்திற்காகவும் செபிப்பார்கள்.*

விண்ணகத் தந்தையே, உம்முடைய வார்த்தையின் மூலம் உம்முடைய அன்பை எங்களுக்கு வெளிப்படுத்தியதற்காக நாங்கள் உம்மைப் புகழ்ந்து, உமக்கு நன்றி கூறுகிறோம். எல்லா சூழ்நிலைகளிலும், தைரியத்துடன் உமது அருளால், எதிர்பாராத வழிகளில் உம்முடைய செயல்களை அடையாளம் கண்டு நிலைத்திருக்க நாங்கள் ஜெபிக்கிறோம். உம்முடைய மிக புனிதமான மற்றும் விலையேறப்பெற்ற பெயரால் கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

ஆமென்

# நமதுசிந்தனை

2025-26 திருவருகைக் காலத்தின் முதல் ஞாயிறு

சிந்தனைப் புத்தகம்



# திருவருகைக் காலத்தின் நான்காம் ஞாயிறு

## தொடக்கச் செபம்.

*அனைவரும் சேர்ந்து தொடக்க செபத்தை செபித்து, தொடக்கப் பாடலை பாடுவார்கள். இது இறைவார்த்தைக்கு ஒருவருக்கொருவர் திறந்த மனதுடனும் இருப்பதை வளர்க்கும்*

தந்தையாகிய இறைவா,

இயேசு கிறிஸ்துவின் பிறப்புக்காக நாங்கள் மகிழ்ச்சியுடனும், நம்பிக்கையுடனும் காத்திருக்கும் எங்களை கூட்டியதற்காய் உமக்கு நன்றி கூறுகிறோம். உம்முடைய புனித விவிலியத்திற்குச் செவிகொடுக்கும்போது, அவருக்குத் திறந்த மனதுடனும், உம்முடைய திருவுளத்திற்குப் பதிலளிக்கத் தயாராகவும் இருக்கும்போது, தூய ஆவியானவர் எங்களை வழிநடத்துவார் என்று நாங்கள் நம்புகிறோம். மரியாவின் கீழ்ப்படிதல் வழியாக கிறிஸ்து அவருடைய கருவில் உருவானது போல, எங்கள் கீழ்ப்படிதல் வழியாக இயேசு எங்கள் இதயங்களில் வேரூன்றட்டும். எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

ஆமென்

# READINGS

*அனைவரும் சேர்ந்து தொடக்க செபத்தை செபித்து, தொடக்கப் பாடலை பாடுவார்கள். இது இறைவார்த்தைக்கு ஒருவருக்கொருவர் திறந்த மனதுடனும் இருப்பதை வளர்க்கும்*

*அடுத்து, அமர்வின் தலைவர் அல்லது நடத்துபவர், கொடுக்கப்பட்டுள்ள விளக்கங்களைக் கொண்டு வாசகங்களை விளக்குவார். தலைவர் அல்லது நடத்துபவர் கூட்டத்திற்கு முன் அவற்றைப் படித்துப் புரிந்துகொள்வது பரிந்துரைக்கப்படுகிறது..*

**விளக்கங்கள்:**

**முதல் வாசகம்:**
**எசாயா 7:10-14**

எசாயா இறைவாக்கினர், யூதா அரசு போரிலிருந்து தப்பிக்கும் என்பதைக் காட்ட, எருசலேமின் அரசர் ஆகாசுக்கு நம் தந்தை கடவுள் எவ்வாறு ஒரு அடையாளத்தை வழங்கினார் என்பதைப் பற்றி கூறுகிறார். ஆகாசு அந்த அடையாளத்தைக் கேட்கும்படி எசாயா அவரை ஊக்குவிக்கிறார், ஆனால் ஆகாசு மறுக்கிறார். அவர் ஆண்டவரை சோதிக்க விரும்பவில்லை என்று சொன்னாலும், நம் தந்தை கடவுள் எருசலேமைக் காப்பாற்ற முடியும் என்று அவர் உண்மையில் நம்பவில்லை என்பதைக் காட்டுகிறது. ஆனால் கடவுளின் திட்டம் ஒரு பூவுலக அரசனால் நிறுத்தப்படாது. பின்னர் எசாயா, "இம்மானுவேல்" என்று பெயரிடப்பட்ட ஒரு குழந்தையின் பிறப்பைப் பற்றி இறைவாக்கு பறைசாற்றுகிறார். இதன் பொருள் "கடவுள் நம்மோடு இருக்கிறார்" என்பதாகும், இது இயேசுவின் எதிர்கால வருகையைச் சுட்டிக்காட்டுகிறது.

**இரண்டாம் வாசகம்:**
**உரோமையர் 1:1-7**

புனித பவுல் தன்னைக் கிறிஸ்து இயேசுவின் ஊழியனாக, நம் தந்தை கடவுளின் நற்செய்தியை அறிவிப்பதற்கு அர்ப்பணித்தவராக அடையாளம் காட்டுகிறார். இந்த செய்தி நீண்ட காலத்திற்கு முன்பே இறைவாக்கினர்கள் வழியாக வாக்களிக்கப்பட்டிருந்தது. இது இயேசுவைப் பற்றியது. அவர் தாவீதின் வம்சத்தில் பிறந்தவர். மேலும், இறப்பிலிருந்து அவர் உயிர்த்தெழுவதன் மூலம் அதிகாரத்துடன் கடவுளின் மகன் என்று அறிவிக்கப்பட்டார். பிற இனத்தார் உட்பட, அனைத்து மக்களையும் விசுவாசத்திற்கு அழைக்க இயேசுவின் வழியாக, பவுல் அப்போஸ்தலப் பணியின் அருளைப் பெற்றார் உரோமைத் திருஅவையில் உள்ளோர், கிறிஸ்துவுக்கு சொந்தமானவர்கள் என்றும், அவருடைய புனித மக்களாக வாழ அழைக்கப்பட்டுள்ளார்கள் என்றும் நினைவூட்டுகிறார்.

**நற்செய்தி:**
**மத்தேயு 1:18-24**

யோசேப்பு ஒரு இக்கட்டான சூழ்நிலையில் சிக்கிக்கொண்டார். அவர் மரியாவுக்கு மண ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தார், இருவரும் கணவன் மனைவியாக வாழவில்லை. ஆனாலும், மரியாள் கருவுற்றிருந்தாள். இது அந்தத் தம்பதியருக்கு கடுமையான விளைவுகளை ஏற்படுத்தக்கூடியது. யூத சட்டத்தின்படி, ஒரு மண ஒப்பந்தம் செய்யப்பட்ட பெண் கன்னியாக இல்லை என்று கண்டறியப்பட்டால் கல்லால் எறியப்பட்டு கொல்லப்படலாம். கருணையுடன் செயல்பட்ட யோசேப்பு, மரியாவின் உயிரைக் காப்பாற்ற இரகசியமாக அவளை தள்ளிவிட முடிவு செய்தார். அப்போதுதான் மரியாவின் கர்ப்பம் உண்மையிலேயே அற்புதமானது என்றும், அது தூய ஆவியானவரின் செயல் என்றும் யோசேப்புக்கு வெளிப்படுத்தப்பட்டது. முதல் வாசகத்தில் இருந்த அரசர் ஆகாசைப் போலல்லாமல், யோசேப்பு விசுவாசம் கொண்டிருந்தார். மேலும், தனக்குச் சொல்லப்பட்டதை அப்படியே செய்தார்.

## சிந்தனைகள்

*மற்றொருவர் இந்த பகுதியை வாசிக்க வேண்டும். இது வாரத்தின் வாசகங்கள் குறித்த நமது சிந்தனைகளை ஆழப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது. சிந்தனைக்கு போதுமான நேரம் அளிக்கப்பட வேண்டும்.*

இன்றைய வாசகங்கள் தெரிவிப்பது போல, நாம் இம்மானுவேலின் வருகையைக் கொண்டாடுகிறோம்: கடவுள் நம்மோடு இருக்கிறார். அவர் வெறும் ஆன்மிக ரீதியாக மட்டும் நம்மோடு இல்லை; அவர் நம்மில் ஒருவராகிவிட்டார். நம் தந்தை கடவுள் உண்மையிலேயே இயேசு கிறிஸ்துவில் நம்மோடு இருக்கிறார் என்பதை நாம் அங்கீகரித்து, நம்பி, இந்தக் கூட்டத்தில் இந்த வியக்க வைக்கும் தருணத்தை அடைந்துவிட்டோமா என்று நாம் உறுதியாகக் கூற முடியுமா? விசுவாசிகளின் ஒரு சமூகமாக, அவருடைய பிறப்பை மட்டுமல்ல, அவருடைய வாழ்க்கை, இறப்பு மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றிலும் இயேசு கிறிஸ்துவை நாம் அங்கீகரித்து ஏற்றுக்கொள்கிறோமா?
இயேசு கிறிஸ்துவை உண்மையாக ஏற்றுக்கொள்வது என்பது நமது வாழ்க்கையின் முழுமையான மாற்றத்தை உள்ளடக்கியது. இதையே புனித பவுல் "விசுவாசத்தின் கீழ்ப்படிதல்" என்று அழைக்கிறார். அதாவது, இயேசு கிறிஸ்துவில் வெளிப்படுத்தப்பட்ட உண்மைக்கு முழு மனதுடன் பதிலளிப்பதாகும்.

நமது இரண்டாம் வாசகத்திலும், நற்செய்தியிலும் குறிப்பிடப்பட்டுள்ள மூன்று நபர்கள், புனித யோசேப்பு, நம் தாய் மரியா மற்றும் புனித பவுல் வாழ்க்கையில் இதைக் காணலாம். ஆண்டவரின் தூதர் அவரிடம் கடவுளின் இரட்சிப்புத் திட்டத்தை வெளிப்படுத்தியபோது, மரியாவை அமைதியாக தள்ளிவிட வேண்டும் என்ற தனது முடிவை புனித யோசேப்பு மாற்றிக்கொண்டார். தாய் மரியாவைத் தன் மனைவியாக ஏற்றுக்கொண்டதற்கு கடுமையான விளைவுகள் இருந்தபோதிலும், அவர் தூதரின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்தார். அவர் இறைவார்த்தையை விசுவாசத்தில் ஏற்றுக்கொண்டது மட்டுமல்லாமல், தூக்கத்திலிருந்து எழுந்ததும் அதைச் செயல்படுத்தினார். அதேபோல், நம் தாய் மரியா மங்கள வார்த்தை அறிவிப்பின்போது ஆண்டவரிடம், "நான் ஆண்டவரின் அடிமை; உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்" (லூக்கா 1:38) என்று கூறினார்.

புனித பவுல், தமஸ்கு செல்லும் வழியில் இயேசு கிறிஸ்துவை சந்தித்தபோது, தனது வாழ்க்கையை முழுவதுமாக நற்செய்திக்காக அர்ப்பணிக்கத் தேர்ந்தெடுத்தார்.

நாம் இயேசுவில் நமது விசுவாசத்தை வைத்து, நமது அன்றாட வாழ்வில் அவரைப் பின்பற்றுகிறோமா? உண்மையான விசுவாசம் வாழ்க்கையின் உண்மையான மாற்றத்திற்கு வழிவகுக்கிறது. இது நமது சமூகத்தில் உள்ள ஏழைகள் மற்றும் ஒதுக்கப்பட்டவர்கள் உட்பட, மற்றவர்களுக்கு நாம் இரக்கத்துடன் அணுகுவதைக் காட்டுகிறது. இன்று, நம் தந்தை கடவுள் நம்மை ஆழமான மாற்றத்திற்கு எங்கே அழைக்கிறார்? புனித யோசேப்பு, நம் தாய் மரியா மற்றும் புனித பவுல் போல, நாமும் விசுவாசத்துடன் பதிலளிக்க அழைக்கப்பட்டுள்ளோம். இயேசு கிறிஸ்துவின் செயல்கள் மற்றும் பரிபூரண கீழ்ப்படிதலில் அவருடைய மீட்புத்திட்டம் தொடர்ந்து வெளிப்படுகிறது .இதுவே , அவருடைய திருச்சபையாகிய நம்மில் உயிர்ப்புடன் உள்ளது

## பகிர்வதற்கான வினாக்கள்:

*இந்தப் பகுதி தனிப்பட்ட மற்றும் குழுவின் சூழலுக்கு ஏற்ப பகிர்தலுக்காகப் பிரிக்கப்பட்டுள்ளது. குழுப் பகிர்தல், சிறிய கிறிஸ்தவ சமூகங்கள், திருஅவையின் தொண்டூழியர்கள் அல்லது குடும்பம் போன்ற குறிப்பிட்ட சூழல்களின் அடிப்படையில் பகிர்தல்களை ஊக்குவிக்கும் நோக்கம் கொண்டது. இந்த*

### தனிப்பட்ட சிந்தனை மற்றும் பகிர்வதற்கான வினாக்கள்

வினாக்களைப் பற்றி சிந்திக்கவும், ஒவ்வொருவரும் பதிலளிக்கவும் நேரம் கொடுக்கப்பட வேண்டும் கீழே உள்ள வினாக்களைப் பற்றி அனைவரும் அமைதியாகச் சிந்திக்கவும். நீங்கள் ஒரு குழுவில் இருந்தால், உங்கள் சிந்தனைகளைப் பகிர்ந்து கொள்ளலாம். விவிலிய வாசகங்களில் உங்களைத் தாக்கியது என்ன, மேலும் நீங்கள் இறைவார்த்தையை மற்றவர்களுடன் எவ்வாறு பகிரலாம் என்பதைப் பற்றி பேசலாம்

- எனது வாழ்க்கையில் பதட்டங்களை நான் எதிர்கொள்ளும்போது, விசுவாசத்துடன் பதிலளிக்க வேண்டும் என்ற அழைப்பை நான் உணர்கிறேனா?
- புனித யோசேப்பு, நம் தாய் மரியா மற்றும் புனித பவுல் போல நான் பதிலளிக்க வேண்டிய எனது வாழ்க்கையின் சில பகுதிகள் என்ன?

### GROUP CONTEXTUAL பகிர்வதற்கான வினாக்கள்

உங்கள் சூழலுக்கு ஏற்ப பின்வரும் வினாக்களில் ஒன்றைப் பற்றி சிந்திக்கலாம்

#### சிறிய கிறிஸ்தவ சமூகங்களுக்கு

இந்த ஆண்டு கிறிஸ்து பிறப்பைச் சிறப்பாகக் கொண்டாட, நாம் புனித யோசேப்பு, நம் தாய் மரியா மற்றும் புனித பவுல் போல பதிலளிக்க வேண்டிய பகுதிகள் என்ன?

#### திருஅவையின் தொண்டூழியர்களுக்கு

இந்த ஆண்டு கிறிஸ்து பிறப்பை இன்னும் அர்த்தமுள்ளதாகக் கொண்டாட, விசுவாசத்தின் கீழ்ப்படிதலில் நமது திருஅவையின் தொண்டுகளில் உறுப்பினர்கள் என்ன தீவிரமான நடவடிக்கைகளை எடுக்கலாம்?

#### குடும்பங்களுக்கு

சமீபத்தில் நமது குடும்பத்திற்குள் நாம் என்ன விசுவாசத்தைக் காட்டினோம், அது இந்த ஆண்டு கிறிஸ்து பிறப்புக்குத் தயாராக நமக்கு எவ்வாறு உதவியது?

## உங்கள் பங்களிப்பு

*இயேசுவின் நற்செய்தியை மற்றவர்களுக்குப் பகிர்ந்துகொள்ள, நீங்கள் மேற்கொள்ளும் முயற்சி.*

இந்த வாரம், நீங்கள் குறியீடுகளை உருவாக்கிய மூன்று நபர்களுக்காக செபியுங்கள். மேலும், கிறிஸ்து பிறப்பு நாளில் அவர்கள் ஒவ்வொருவருக்கும் அவர்களுடைய குறியீட்டை வழங்குவதற்குத் தயாராகுங்கள்.

## நிறைவுச் செபம்

*அமர்வின் முடிவில், அனைவரும் சேர்ந்து செபிப்பார்கள். ஒவ்வொருவரும் பங்கேற்பாளர்களுக்காகவும் பின்னர் சமூகத்திற்காகவும் செபிப்பார்கள்.*

விண்ணகத் தந்தையே, உம்மை நம்புவது மிக முக்கியமானது என்பதை நாங்கள் அறிகிறோம். புனித யோசேப்பு எமக்கு விசுவாசத்தின் ஒரு உதாரணத்தைக் காட்டுகிறார்: அவருக்குப் புரியாதபோதும், அவர் உம்மை நம்பி, கீழ்ப்படிந்தார். புனித பவுலும் விசுவாசத்தால் வாழும்படி எம்மை வலியுறுத்துகிறார். அவர்களுடைய சாட்சியால் ஊக்குவிக்கப்பட்டு, உம்முடைய விசுவாசத்தால் பலப்படுத்தப்பட்டு, நற்செய்தியின் தூதுவர்களாக எங்களை அழைத்ததற்காக நாங்கள் உமக்கு நன்றி கூறுகிறோம். எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

ஆமென்.

## சிந்தனைப் புத்தகம்



the word was
made flesh
& lived among us

வார்த்தை மனுவுருவானர். அவர்
நம்மிடையே குடிகொண்டார்

(ஆண்டு A)

# கிறிஸ்து பிறப்புப் பெருவிழாக்கள்

**கிறிஸ்து பிறப்பு, ஆண்டவரின் பிறப்பு**

எசாயா 52:7-10
எபிரேயர் 1:1-6
யோவான் 1:1-18

**புனித மரியாள், கடவுளின் தாய் பெருவிழா**

எண்ணிக்கை 6:22-27
கலாத்தியர் 4:4-7
லூக்கா 2:16-21

**ஆண்டவரின் திருக்காட்சிப் பெருவிழா**

எசாயா 60:1-6 ;
எபேசியர் 3:2-3, 5-6 ;
மத்தேயு 2:1-12



# கிறிஸ்து பிறப்பு நாள், ஆண்டவரின் பிறப்பு

## தொடக்கச் செபம்.

*அனைவரும் சேர்ந்து தொடக்க செபத்தை செபித்து, தொடக்கப் பாடலை பாடுவார்கள். இது இறைவார்த்தைக்கு ஒருவருக்கொருவர் திறந்த மனதுடனும் இருப்பதை வளர்க்கும்.*

அன்புமிக்க தந்தையே,

உம்முடைய மகனின் பிறப்பு, உம்முடைய அன்பின் அடையாளமாக எங்களுக்குப் பெரும் மகிழ்ச்சியைக் கொண்டு வருகிறது. அவருடைய வருகை, நீர் எங்களோடு இருக்க விரும்புகிறீர் என்பதையும், விவிலியங்கள் வழியாக எங்களிடம் பேச விரும்புகிறீர் என்பதையும் காட்டுகிறது. உம்முடைய வார்த்தையை நினைவில் கொண்டு, உம்முடைய மகனின் பிறப்பைக் கொண்டாடுகிறோம். எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

ஆமென்.

## வாசகங்கள்

*மூன்று விவிலிய வாசகங்களையும், அவற்றின் விளக்கங்களையும் உரக்கப் படிக்க வேண்டும். சிறிது நேரம் அமைதியாகச் சிந்திக்க வாய்ப்பு கொடுக்கப்பட வேண்டும்.*

*அடுத்து, அமர்வின் தலைவர் அல்லது நடத்துபவர், கொடுக்கப்பட்டுள்ள விளக்கங்களைக் கொண்டு வாசகங்களை விளக்குவார். தலைவர் அல்லது நடத்துபவர் கூட்டத்திற்கு முன் அவற்றைப் படித்துப் புரிந்துகொள்வது பரிந்துரைக்கப்படுகிறது*

**. விளக்கங்கள்:**

**முதல் வாசகம்:**

### ISAIAH 52:7-10

இந்த பகுதி, இஸ்ரயேலர் பாபிலோனில் நாடுகடத்தப்பட்ட காலத்தில் அல்லது அதற்குப் பிறகு எழுதப்பட்டது. இயல்பாகவே, அவர்கள் விடுதலை அமைதி மற்றும் எருசலேமுக்குத் திரும்புவதற்கு ஏங்கினர். இறைவாக்கினர் எசாயா வழியாகப் பேசும் நம் தந்தை கடவுள், அவர்களுடைய சோதனையில் தமது தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் அளிக்கிறார். அவர்கள் ஒரு வேற்றுஅரசின் கீழ் வாழ்ந்தாலும், அவர்கள் இன்னும் அவருடைய மக்கள் ("கடவுளாகிய ஆண்டவர் அரசர்க்கெல்லாம் அரசர்!") என்று அவர் அவர்களுக்கு நினைவூட்டுகிறார். அவருக்கு உரித்தானது மக்களினமோ அல்லது உரிமை கொண்டாடும் ஒரு விஷயமோ அல்ல ஆனால், இஸ்ரயேலர் எப்போதுமே அதற்காகத்தான் ஏங்கினர். ஏனெனில், கடவுளின் வழியாக மட்டுமே "எருசலேமின் இடிபாடுகளை" முழுமையாக மீட்டெடுக்கப்பட முடியும். ஆறுதலுக்காகவும் , சமாதானத்துக்காகவும் இன்று ஏங்கும் அனைவருக்கும் இதுவே கடவுளின் வாக்குறுதி..

**இரண்டாம் வாசகம்:**

### HEBREWS 1:1-6

இது முழுமையையும் மகனுக்குரிய உரிமையையும் காட்டுகிறது. முதல் வாசகத்தில், ஆண்டவர் மீட்பையும் சமாதானத்தையும் வாக்குறுதி அளிப்பதைக் காண்கிறோம்.மக்கள் இறுதியில் எருசலேமுக்குத் திரும்புகிறார்கள் .ஆனால், இன்னும் பாவத்தின் சுமையால் ஒரு வகையான ஒடுக்குமுறையை அனுபவிக்கின்றனர். கிறிஸ்துவின் காலத்திற்குப் பிறகு எழுதுபவரான எபிரேயருக்கு எழுதிய கடிதத்தில் புனித பவுல், பின்னோக்கிப் பார்க்கும்போது, நம் தந்தை கடவுள் தனது முந்தைய வாக்குறுதிகளை மிகச் சரியான வழியில் எவ்வாறு நிறைவேற்றுகிறார் என்று காண்கிறார். அவர் மற்றொரு தூதுவரை வெறுமனே அனுப்பவில்லை. அவர் தமது மகனை அனுப்பினார். இயேசுவில், தெய்வீக அன்பு வெறும் பேச்சாக இல்லாமல், முழுவதுமாக வெளிப்படுத்தப்பட்டு, செயல்படுத்தப்படுகிறது.

**நற்செய்தி:**

### JOHN 1:1-18

நற்செய்திகள் இயேசு கிறிஸ்துவைப் பற்றியவை. புனித யோவான் (அப்போஸ்தலர்) அவரை "வார்த்தை" என்று அழைப்பதன் மூலம் தொடங்குகிறார். நாம் வார்த்தைகளால் நம்மை வெளிப்படுத்தி, மற்றவர்களுடன் உறவுகளை உருவாக்குகிறோம். கடந்த காலத்தில், நம் தந்தை கடவுள் எசாயா மற்றும் புனித திருமுழுக்கு யோவான் (வாசகங்களில் குறிப்பிடப்பட்டுள்ளவர்) போன்ற இறைவாக்கினர்களை "ஒளிக்கு சாட்சியாகப் பேச" பயன்படுத்தினார். தமது பணியின் உச்சத்தில், நம் தந்தை கடவுள் ஒரு செய்தியை அனுப்பவில்லை, அவர் "மாறாக அவர் நம் மத்தியில் வாழ வார்த்தையால் தமது மகனையே அனுப்பினார் .இதன் வழி, நம் தந்தை கடவுளின் அன்பை முழுமையாக வெளிப்படுத்துகிறார். அவரே அரசர், சமாதானத்தின் இளவரசர், அனைத்து மனிதகுலமும் அவருக்காகத்தான் காத்திருந்தது..

## சிந்தனைகள்

*மற்றொருவர் இந்த பகுதியை வாசிக்க வேண்டும். இது வாரத்தின் வாசகங்கள் குறித்த நமது சிந்தனைகளை ஆழப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது. சிந்தனைக்கு போதுமான நேரம் அளிக்கப்பட வேண்டும்*

கிறிஸ்து பிறப்பு, மதநம்பிக்கையைப் பொருட்படுத்தாமல், பல குடும்பத்தினருக்கும் நண்பர்களுக்கும் அமைதி மற்றும் நல்லெண்ணத்தை வெளிப்படுத்தும் ஒரு புனித நாள். அனைவரும் இதனை ஒரு நாள் அல்லது மூன்று நாட்களுக்கு மட்டும் இதை கொண்டாடிவிட்டு, பின்னர் "வழக்கம் போல" தினசரி வாழ்க்கைக்கு திரும்புகிறோம். கத்தோலிக்கர்களாக நாமும் இதையே செய்கிறோம் இதற்கு ஒவ்வொரு நாளும் கிறிஸ்து பிறப்பின் மகிழ்ச்சியையும் அமைதியையும் கொண்டிருந்தால் நன்றாக இருக்கும்!

ஆனால், கிறிஸ்து பிறப்பானது நமக்கு ஒரு பொது விடுமுறையையோ அல்லது நமது பிரச்சனைகளிலிருந்து தற்காலிகமாக நம்மை திசைதிருப்ப சில சமூகக் கூட்டங்களையோ கொடுப்பதற்காக மட்டும் நடக்கவில்லை. நாம் உண்மையில் எதை கொண்டாடுகிறோம்? நமது ஆண்டவரின் மனுவுருவையும் அவருடைய பிரசன்னத்தையும் உணர வேண்டும் "வார்த்தை உருவெடுத்து, அவர் நம்மிடையே வாழ்ந்தார்." எனவே, "இம்மானுவேல்" ("நம்மோடிருக்கும் கடவுள்") என்பதைக் கொண்டாடும் மகிழ்ச்சி, கிறிஸ்து பிறப்புக்கு அப்பாற்பட்டும் தொடர வேண்டும்!

நாம் சோதனைகளை எதிர்கொள்ளும்போது ஆறுதலுக்காக நாம் ஏங்குகிறோம். ஆனால், நாம் நமது சிரமத்தில் மிகவும் மூழ்கியிருந்தால் இந்த ஆறுதலை இழக்க நேரிடும். அதேபோல், இயேசு கிறிஸ்து எப்போதும் நம்மோடு இருக்கிறார் என்பதை நாம் மறந்துவிட்டால் வாழ்க்கையின் போராட்டங்கள் மிகப் பெரியதாகத் தோன்றலாம். அவர் அந்தப் போராட்டங்களை அகற்ற வரவில்லை, மாறாக அத்துன்பத்தின் காரணமான பாவத்தையே அகற்ற வருகிறார்.

நமது ஆண்டவர் தொடர்ந்து பாவத்திற்கு எதிராக நம்மை எச்சரிக்கிறார். ஏனெனில், அவர் நமது செயல்களில் அதிக அக்கறை கொண்டுள்ளார். மாறாக, பாவம் மிகப்பெரிய துயரம் என்பதை நாம் காண வேண்டும் என்று அவர் விரும்புகிறார். நமது நித்திய மகிழ்ச்சியை எடுக்கக்கூடிய ஒரே விஷயம் அதுதான். எப்போதும் நம்மோடு இருக்கும் கடவுளுக்கு நாம் பிரசன்னமாய் இருக்க கற்றுக்கொள்வோம். உலகிற்குள் அவருடைய வருகையின் மகிழ்ச்சி இன்று மட்டுமல்ல, நமது வாழ்நாள் முழுவதும் நம்மை வழிநடத்தட்டும்

## பகிர்வதற்கான வினாக்கள்:

*இந்தப் பகுதி தனிப்பட்ட மற்றும் குழுவின் சூழலுக்கு ஏற்ப பகிர்தலுக்காகப் பிரிக்கப்பட்டுள்ளது. குழுப் பகிர்தல், சிறிய கிறிஸ்தவ சமூகங்கள், திருஅவையின் தொண்டூழியர்கள் அல்லது குடும்பம் போன்ற குறிப்பிட்ட சூழல்களின் அடிப்படையில் பகிர்தல்களை ஊக்குவிக்கும் நோக்கம் கொண்டது. இந்த*

### தனிப்பட்ட சிந்தனை மற்றும் பகிர்வதற்கான வினாக்கள்

வினாக்களைப் பற்றி சிந்திக்கவும், ஒவ்வொருவரும் பதிலளிக்கவும் நேரம் கொடுக்கப்பட வேண்டும் கீழே உள்ள வினாக்களைப் பற்றி அனைவரும் அமைதியாகச் சிந்திக்கவும். நீங்கள் ஒரு குழுவில் இருந்தால், உங்கள் சிந்தனைகளைப் பகிர்ந்து கொள்ளலாம். விவிலிய வாசகங்களில் உங்களைத் தாக்கியது என்ன, மேலும் நீங்கள் இறைவார்த்தையை மற்றவர்களுடன் எவ்வாறு பகிரலாம் என்பதைப் பற்றி பேசலாம்

- நீங்கள் கிறிஸ்து பிறப்பு பற்றி நினைக்கும்போது என்ன வார்த்தைகள் உங்கள் மனதில் தோன்றுகின்றன?
- இந்த வார்த்தைகள் வரவிருக்கும் ஆண்டில் உங்களுக்கு எவ்வாறு உதவலாம் அல்லது உங்களை ஊக்குவிக்கலாம்?

### GROUP CONTEXTUAL பகிர்வதற்கான வினாக்கள்

உங்கள் சூழலுக்கு ஏற்ப பின்வரும் வினாக்களில் ஒன்றைப் பற்றி சிந்திக்கலாம்

**சிறிய கிறிஸ்தவ சமூகங்களுக்கு**

கிறிஸ்து பிறப்பு கொண்டாட்டம் நீங்கள் ஒரு சமூகமாக வாழும் விதத்தை எவ்வாறு மாற்றுகிறது?

**திருஅவையின் தொண்டூழியர்களுக்கு**

கடந்த காலத்தில் கிறிஸ்து பிறப்பு உங்கள் திருஅவையின் தொண்டுகளை எவ்வாறு வடிவமைத்தது? மேலும் இந்த ஆண்டு கொண்டாட்டத்திற்குப் பிறகு என்னென்ன மாற்றங்களை நீங்கள் நம்புகிறீர்கள்?

**குடும்பங்களுக்கு**

கிறிஸ்து பிறப்பு மகிழ்ச்சியையும், அதன் உணர்வையும் அந்த நாளுக்கு அப்பால் உங்கள் குடும்பம் எவ்வாறு உயிருடன் வைத்திருக்க உதவுகிறது?

## உங்கள் பங்களிப்பு

இயேசுவின் நற்செய்தியை மற்றவர்களுக்குப் பகிர்ந்துகொள்ள, நீங்கள் மேற்கொள்ளும் முயற்சி.

நீங்கள் தேர்ந்தெடுத்த மூன்று நபர்களுக்கு அந்த குறியீட்டைக் கொடுத்து, அதன் அர்த்தத்தை விளக்குங்கள். பின்னர், கிறிஸ்து பிறப்பு என்பது பரிசுப் பொருட்கள், உணவு, பானம் பற்றி மட்டுமல்ல, எல்லாவற்றுக்கும் மேலாக நம் தந்தையின் அன்பின் கொண்டாட்டம் என்பதையும் அவர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

## நிறைவுச் செபம்


*அமர்வின் முடிவில், அனைவரும் சேர்ந்து செபிப்பார்கள். ஒவ்வொருவரும் பங்கேற்பாளர்களுக்காகவும் பின்னர் சமூகத்திற்காகவும் செபிப்பார்கள்.*

அன்புள்ள தந்தையே,

உம்முடைய மகனின் பிறப்பிற்காக உமக்கு நன்றி கூறுகிறோம். அவரே உத்தமமான தூதுவரும், எங்களுக்கான உம்முடைய அன்பின் மிகப் பெரிய அடையாளமும் ஆவார். எங்களுக்குள் பிறந்தவராகவும், திவ்விய நற்கருணையில் பிரசன்னமாக இருப்பவராகவும், நீர் எங்களுடன் இருக்க வேண்டும் என்ற உமது ஆழமான விருப்பத்தை வெளிப்படுத்துகிறீர். இந்த அன்பின் வரத்திற்காக நாங்கள் வார்த்தைகளால் நன்றி சொல்ல முடியாது, அதனால் எங்கள் இதயங்களை நன்றியுடன் உயர்த்துகிறோம். எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

ஆமென்.

## சிந்தனைப் புத்தகம்



# புனித மரியாள், கடவுளின் தாய் பெருவிழா

## தொடக்கச் செபம்.

*அனைவரும் சேர்ந்து தொடக்க செபத்தை செபித்து, தொடக்கப் பாடலை பாடுவார்கள். இது இறைவார்த்தைக்கு ஒருவருக்கொருவர் திறந்த மனதுடனும் இருப்பதை வளர்க்கும்.*

எல்லாம் வல்ல அன்புள்ள தந்தையே,

புனித கன்னி மரியா வழியாக, உம் மகனாகிய எங்கள் மீட்பர் மற்றும் ஆண்டவரை உலகிற்கு அளித்தீர். இந்த கிறிஸ்து பிறப்பு காலத்தில் நாங்கள் தொடர்ந்து மகிழும் நேரத்தில், மரியாவை கடவுளின் தாய் என்று மகிமைப்படுத்தி, உமக்கு புகழையும், மாட்சிமையையும் அளிக்கிறோம். எங்கள் இதயங்களில் உம்முடைய வார்த்தை, இயேசு கிறிஸ்துவின் பிறப்பின் மறைபொருளை இன்னும் ஆழமாகப் புரிந்துகொள்ள எங்களுக்கு அருள் தாரும். இவ்வேளையில், உம்முடைய மகனிடம் நாங்கள் நெருங்கி வரவும், உம்முடைய மீட்பின் அன்பில் எங்கள் விசுவாசத்தை பலப்படுத்தவும் விரும்புகிறோம். எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

ஆமென்.

## வாசகங்கள்

*மூன்று விவிலிய வாசகங்களையும், அவற்றின் விளக்கங்களையும் உரக்கப் படிக்க வேண்டும். சிறிது நேரம் அமைதியாகச் சிந்திக்க வாய்ப்பு கொடுக்கப்பட வேண்டும்.*

*அடுத்து, அமர்வின் தலைவர் அல்லது நடத்துபவர், கொடுக்கப்பட்டுள்ள விளக்கங்களைக் கொண்டு வாசகங்களை விளக்குவார். தலைவர் அல்லது நடத்துபவர் கூட்டத்திற்கு முன் அவற்றைப் படித்துப் புரிந்துகொள்வது பரிந்துரைக்கப்படுகிறது*

### . விளக்கங்கள்:

### முதல் வாசகம்:
### NUMBERS 6:22-27

இந்த நிகழ்ச்சி, இஸ்ரயேலர் எகிப்திலிருந்து விடுவிக்கப்பட்ட பிறகு, வனாந்தரத்தின் வழியாக அவர்கள் மேற்கொண்ட கடினமான பயணத்தின்போது நடக்கிறது. நிச்சயமற்ற மற்றும் கடினமான சூழலுக்கு மத்தியில், நம் தந்தை கடவுள் தேர்ந்தேடுக்கப்பட்டோர்க்கு தமது பெயரில் மக்களுக்கு ஆசி வழங்கும்படி கட்டளையிட்டார். இந்த ஆசி, அவர் அருகில் இருக்கிறார் என்றும், அவர்களுக்கு மத்தியில் வாழ்கிறார் என்றும் அவர்களுக்கு மீண்டும் உறுதியளித்தது. இதன் மூலம், ஒவ்வொரு பருவத்திலும் அவருடைய விசுவாசமுள்ள பராமரிப்பில் அவர்கள் நம்பிக்கை வைக்க அழைக்கப்பட்டனர். காலம் நிறைவுற்றபோது, இந்த ஆசீர், கடவுளின் தாயான மரியாவிடம் பிறந்த இயேசு கிறிஸ்துவில் நிறைவேறுகிறது. அவருடைய மனப்பூர்வமான "ஆம்" வழியாக, வார்த்தை உருவெடுத்து, நம்மத்தியில் வாழ்ந்தது. இது கடவுளின் பிரசன்னத்தை அவரின் பிறப்பு மறைபொருளின் வழி முழுமையாக வெளிப்படுத்துகிறது..

### இரண்டாம் வாசகம்:
### GALATIANS 4:4-7

புனித பவுல், கிறிஸ்துவின் பிறப்பு வழியாக நம் தந்தை கடவுளின் அன்பான திட்டத்தை வெளிப்படுத்துகிறார். குறிக்கப்பட்ட காலத்தில் அவர் தமது மகனை நம்மை மீட்டுக்கொள்ள அனுப்பினார். இதன்மூலம் நாம் அவருடைய பிள்ளைகளாகவும், வாரிசுகளாகவும் ஏற்றுக்கொள்ளப் பட்டோம். மோசேயின் சட்டத்தைக் கடைப்பிடிப்பதன் மூலம் மீட்பு வருவதில்லை, ஆனால் நம் தந்தை கடவுளின் அருளினாலும், கிருபையினாலும் முயற்சியினாலும் மட்டுமே வருகிறது என்று புனித பவுல் நமக்கு நினைவூட்டுகிறார். இந்த பகுதி, நம் தந்தை கடவுளின் அன்புக்குரிய பிள்ளைகளாக, அவருடன் நமது புதிய உறவின் விடுதலையையும், நெருக்கத்தையும் ஏற்றுக்கொள்ள நம்மை அழைக்கிறது. மரியாள், "கடவுளின் தாய்" (Theotokos) என்று திருச்சபையால் மதிக்கப்படுகிறார். ஏனெனில், அவளுடைய விசுவாசமுள்ள "ஆம்" வழியாக, இயேசு உலகிற்குள் நுழைந்து, அனைவருக்கும் மீட்பைக் கொண்டு வந்தார்.

### நற்செய்தி:
### LUKE 2:16-21

இந்த நற்செய்திக் காட்சியில் பெத்லகேமின் அமைதியான சூழ்நிலையால் நாம் ஈர்க்கப்படுகிறோம். பாலகனாம் இயேசு, நம் தாய் மரியா அருகில் ஒரு மாட்டுத் தீவனத் தொட்டியில் படுத்திருக்கிறார். புனித யோசேப்பு அவரைக் கவனிக்கிறார். மேலும், மேய்ப்பர்கள் அவரை வரவேற்கிறார்கள். நம் தாய் மரியா இந்த மறைவான தருணங்களை தமது இதயத்தில் பொக்கிஷமாகப் பாதுகாக்கிறார். மேலும், புனித யோசேப்புடன் சேர்ந்து, குழந்தைக்கு இயேசு - " அருள் பொழிவு பெற்றவர் " என்று பெயரிடுகிறார். இதில், நம் தந்தை கடவுளின் இதயம், மென்மையானது, நம் அருகில் உள்ளது, அது இரக்கத்தால் நிறைந்தது என்ற பிறப்பின் மறைபொருள் வெளிப்படுகிறது.மேலும், அவருடைய திருவுளத்திற்குத் தம்மை ஒப்பு கொடுத்த ஒரு குடும்பத்தின் வழியாக நம்முடன் வாழ வருகிறார் என்பதை நமக்கு நினைவூட்டுகிறது.

## சிந்தனைகள்

*மற்றொருவர் இந்த பகுதியை வாசிக்க வேண்டும். இது வாரத்தின் வாசகங்கள் குறித்த நமது சிந்தனைகளை ஆழப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது. சிந்தனைக்கு போதுமான நேரம் அளிக்கப்பட வேண்டும்*

கடவுளின் தாய் மரியாளின் பெருவிழாவில், நமது விசுவாசத்தின் மையத்தில் இருக்கும் ஒரு ஆழமான மறைபொருளைப் பற்றி சிந்திக்கிறோம்: இயேசு உண்மையிலேயே கடவுளும், உண்மையிலேயே மனிதரும் ஆவார். மரியாவை கடவுளின் தாய் என்று மதிப்பதன் மூலம், அவள் சுமந்த குழந்தை வெறும் மனிதன் அல்ல, ஆனால் நம் தந்தை கடவுளின் நித்திய மகன் என்று திருச்சபை உறுதிப்படுத்துகிறது. அவர் தெய்வீக மற்றும் மனித இயல்பு ஆகிய இரண்டையும் கொண்ட ஒருவரே, அவை முழுமையாக ஒன்றுபட்டவை. கடவுள் உருவெடுத்த இந்த பிறப்பின் மறைபொருள், நமக்கான நம் தந்தை கடவுளின் நம்ப முடியாத அன்பை வெளிப்படுத்துகிறது.அவர் நம்மில் ஒருவராக முழுமையாக நமது உலகிற்குள் நுழையத் தேர்ந்தெடுத்தார். இயேசுவின் வழியாக, நமது இரட்சிப்பு சாத்தியமாக்கப்பட்டுள்ளது.

கிறிஸ்து முழுவதுமாக கடவுள் மற்றும் முழுவதுமாக மனிதர் என்பதைப் புரிந்துகொள்வது நமது விசுவாசத்திற்கு இன்றியமையாதது. இயேசு, கடவுளாக இருந்ததால் மட்டுமே பாவத்தையும், மரணத்தையும் வென்று, நமக்கு நித்திய வாழ்வை வழங்க முடியும்.ஆயினும், அவர் நம் மனித அனுபவத்தின் மகிழ்ச்சிகள், போராட்டங்கள் மற்றும் துன்பங்கள் என ஒவ்வொரு அம்சத்திலும் பங்குபெற்றார். இதன்மூலம், அவர் கடவுளுக்கும் மனிதகுலத்திற்கும் இடையே ஒரு சரியான பாலமாக இருக்க முடியும். தெய்வீக மற்றும் மனித இயல்புகளின் இந்த ஒற்றுமை, கடவுளின் அன்பு தூரத்திலானது அல்லது கற்பனையானது அல்ல, ஆனால் தனிப்பட்ட, நெருக்கமான மற்றும் ஆழமான உண்மை என்பதை நமக்கு நினைவூட்டுகிறது.

கடவுளுக்கு மரியா அளித்த விசுவாசமுள்ள "ஆம்", இந்த மகத்தான மறைபொருள் வெளிவர வழி வகுத்தது. ஒரு கடினமான வனாந்தரத்தின் வழியாக அலைந்த இஸ்ரயேலர்களைப் போல, நாமும் வாழ்க்கையில் நிச்சயமற்ற தன்மைகளையும், சோதனைகளையும் எதிர்கொள்கிறோம். ஆனால், நம் தந்தை கடவுளின் ஆசி, அவருடைய மக்களுடன் வாழ வாக்குறுதியளித்தது போல, இன்றும் அவருடைய பிரசன்னம் அமைதி மற்றும் சொந்தமான உணர்வுக்கான ஒரு ஆதாரமாக நம்மோடு உள்ளது. இந்த விசுவாசமுள்ள பிரசன்னத்தில் நம்பிக்கை வைத்து, அவருடைய அன்புக்குரிய பிள்ளைகளாக வாழ நாம் அழைக்கப்பட்டுள்ளோம்.

கடவுளின் தாய் மரியாவின் தாய்மையை நாம் கொண்டாடும்போது, அவருடைய பணிவையும், தாழ்மையையும் பின்பற்றுவோம். அவர் நம்மில் செயல்பட அனுமதிப்போம், இதன் மூலம் நாமும் இயேசு கிறிஸ்துவின் இரக்கம் மற்றும் அன்பின் உயிர்ப்புள்ள சாட்சிகளாக மாறலாம். அவதாரமான அவருடைய மகன் இயேசுவின் வழியாக நம் தந்தை கடவுளுடன் ஐக்கியமாக இருப்பதிலிருந்து வரும் மகிழ்ச்சி, நம்பிக்கை மற்றும் சுதந்திரத்தை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வோம்

.

## பகிர்வதற்கான வினாக்கள்:

*இந்தப் பகுதி தனிப்பட்ட மற்றும் குழுவின் சூழலுக்கு ஏற்ப பகிர்தலுக்காகப் பிரிக்கப்பட்டுள்ளது. குழுப் பகிர்தல், சிறிய கிறிஸ்தவ சமூகங்கள், திருஅவையின் தொண்டூழியர்கள் அல்லது குடும்பம் போன்ற குறிப்பிட்ட சூழல்களின் அடிப்படையில் பகிர்தல்களை ஊக்குவிக்கும் நோக்கம் கொண்டது. இந்த*

### தனிப்பட்ட சிந்தனை மற்றும் பகிர்வதற்கான வினாக்கள்

வினாக்களைப் பற்றி சிந்திக்கவும், ஒவ்வொருவரும் பதிலளிக்கவும் நேரம் கொடுக்கப்பட வேண்டும் கீழே உள்ள வினாக்களைப் பற்றி அனைவரும் அமைதியாகச் சிந்திக்கவும். நீங்கள் ஒரு குழுவில் இருந்தால், உங்கள் சிந்தனைகளைப் பகிர்ந்து கொள்ளலாம். விவிலிய வாசகங்களில் உங்களைத் தாக்கியது என்ன, மேலும் நீங்கள் இறைவார்த்தையை மற்றவர்களுடன் எவ்வாறு பகிரலாம் என்பதைப் பற்றி பேசலாம்

- கடந்த காலத்தில் நீங்கள் நம் தந்தை கடவுளின் திருவுளத்தை எவ்வாறு கண்டுகொண்டீர்கள்?
- நம் தந்தை கடவுளின் திருவுளத்தைச் செய்ய நீங்கள் உங்களுடைய திட்டங்களை விட்டுக்கொடுத்துள்ளீர்களா?

### பகிர்வதற்கான வினாக்கள்

உங்கள் சூழலுக்கு ஏற்ப பின்வரும் வினாக்களில் ஒன்றைப் பற்றி சிந்திக்கலாம்

#### சிறிய கிறிஸ்தவ சமூகங்களுக்கு

நமது சொந்த கருத்துக்கள் மற்றும் விருப்பங்களுக்கு மேலாக கடவுளின் அழைப்பை நம்புவதன் மூலம், நம்முடைய திருஅவையின் தொண்டூழியர்கள் மரியாவின் அர்ப்பணிப்புக் கு எவ்வாறு நடைமுறை வழிகளில் வழிநடத்த முடியும்?

#### திருஅவையின் தொண்டூழியர்களுக்கு

நமது சொந்த கருத்துக்கள் மற்றும் விருப்பங்களுக்கு மேலாக கடவுளின் அழைப்பை நம்புவதன் மூலம், நம்முடைய திருஅவையின்தொண்டுகளில் மரியாவின் அர்ப்பணிப்பை எவ்வாறு நடைமுறை வழிகளில் வழிநடத்த முடியும்?

#### குடும்பங்களுக்கு

நம் தாய் மரியாவைப் போல, நமது குடும்பம் எவ்வாறு ஒருவரையொருவர் மதிப்பதன் மூலமும், ஒவ்வொரு உறுப்பினருக்காகவும் கடவுளின் திருவுளத்தை நம்புவதன் மூலமும் விசுவாசத்தைக் காட்ட முடியும்?

## உங்கள் பங்களிப்பு

இயேசுவின் நற்செய்தியை மற்றவர்களுக்குப் பகிர்ந்துகொள்ள, நீங்கள் மேற்கொள்ளும் முயற்சி.

நீங்கள் தேர்ந்தெடுத்த மூன்று நபர்களுக்கு அந்த குறியீட்டைக் கொடுத்து, அதன் அர்த்தத்தை விளக்குங்கள். அவர்கள் தங்கள் தாய்மார்களை எப்படி மதிக்கிறார்கள், ஏன் என்று அவர்களிடம் கேளுங்கள்..

## நிறைவுச் செபம்

அமர்வின் முடிவில், அனைவரும் சேர்ந்து செபிப்பார்கள்.
ஒவ்வொருவரும் பங்கேற்பாளர்களுக்காகவும் பின்னர் சமூகத்திற்காகவும் செபிப்பார்கள்.

எப்போதும் பராமரிக்கும் தந்தையே,


இந்த உலகில் எங்கள் புனிதப் பயணத்தில், நீர் எப்போதும் எங்கள் அருகிலிருந்தும், எங்களுக்குள் வாழ்கிறீர் என்று உறுதியளிக்கிறீர். உம்மோடு எங்கள் புதிய உறவில் நாங்கள் அனுபவிக்கும் விடுதலையையும் உறவையும் புனித பவுல் எமக்கு நினைவூட்டுகிறார். அவரது சாட்சியிலிருந்து வந்த தைரியத்துடன், நாங்கள் வாக்குறுதியளிக்கப்பட்ட நிலத்திற்கு எங்கள் பயணத்தைத் தொடர்கிறோம். மரியாவும், யோசேப்பும் இயேசுவை பராமரித்தது போல, நீர் எங்களைக் பராமரித்து வருகிறீர் என்று நாங்கள் நம்புகிறோம். எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

ஆமென்

# நமதுசிந்தனை

2025-26 திருவருகைக் காலத்தின் முதல் ஞாயிறு

சிந்தனைப் புத்தகம்



# ஆண்டவரின் திருக்காட்சிப் பெருவிழா

## தொடக்கச் செபம்.

*அனைவரும் சேர்ந்து தொடக்க செபத்தை செபித்து, தொடக்கப் பாடலை பாடுவார்கள். இது இறைவார்த்தைக்கு ஒருவருக்கொருவர் திறந்த மனதுடனும் இருப்பதை வளர்க்கும்.*

விண்ணகத் தந்தையே,

இந்த ஞாயிறு வாசகங்களை நாங்கள் படிக்கவும், சிந்திக்கவும் தயாராகும்போது, உம்மை எங்களுக்கு வெளிப்படுத்தியதற்காக உமக்கு நன்றி கூறுகிறோம். விசுவாசம் என்ற வரத்திற்காகவும், உமது அன்பை அறிந்துகொள்ளும் அருளுக்காகவும், உம்மோடு நித்தியத்தை செலவழிக்கும் வாய்ப்பிற்காகவும் உமக்கு நன்றி. எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

ஆமென்

## சிந்தனைகள்

*மூன்று விவிலிய வாசகங்களையும், அவற்றின் விளக்கங்களையும் உரக்கப் படிக்க வேண்டும். சிறிது நேரம் அமைதியாகச் சிந்திக்க வாய்ப்பு கொடுக்கப்பட வேண்டும்.*

*அடுத்து, அமர்வின் தலைவர் அல்லது நடத்துபவர், கொடுக்கப்பட்டுள்ள விளக்கங்களைக் கொண்டு வாசகங்களை விளக்குவார். தலைவர் அல்லது நடத்துபவர் கூட்டத்திற்கு முன் அவற்றைப் படித்துப் புரிந்துகொள்வது பரிந்துரைக்கப்படுகிறது*

### விளக்கங்கள்:

**முதல் வாசகம்:**
**எசாயா 60:1-6**

தமது ஞானத்தில், நம் தந்தை கடவுள் முதலில் இஸ்ரயேலுக்குத் தம்மை வெளிப்படுத்தினார். அதற்கடுத்ததாக, அவர்கள் அவரைக் குறித்து அனைத்து மக்களுக்கும் - யூதர்களுக்கும், யூதர் அல்லாதவர்களுக்கும் - தெரியப்படுத்த வேண்டும். இந்த பகுதியில், எசாயா அந்த திட்டத்தின் நிறைவேறுதலைப் பற்றி இறைவாக்கு பறைசாற்றுகிறார். "ஆண்டவரின் மகிமை" என்பது நம் தந்தை கடவுளின் பிரசன்னமே, இது அவரது மகன் இயேசு கிறிஸ்துவில் முழுமையாகக் காணப்படுகிறது. அவரது ஒளி எருசலேமின் மீது (திருச்சபையின் ஒரு முன்காட்சி) உதிக்கிறது, மேலும் உலகின் நாடுகள் இந்த ஒளியில் நடக்க - அதாவது, ஆண்டவரின் வழிகளைப் பின்பற்ற - எருசலேமில் கூடுகிறார்கள். அவர்கள் பொன் மற்றும் சாம்பிராணி பரிசுகளை கொண்டு வருகிறார்கள். இது குழந்தை இயேசுவை வணங்கும் ஞானிகளைச் சுட்டிக்காட்டுகிறது.

**இரண்டாம் வாசகம்:**
**எபேசியர் 3:2-3A, 5-6**

புனித பவுல், எபேசுவில் உள்ள திருச்சபைக்கு எழுதும் போது , அதில் யூதர்களும், பிற இனத்தவர்களும் (யூதர் அல்லாதவர்கள்) இருந்தனர். யூதர்கள் தங்களுக்குள்ளும், பிற இனத்தவர்களுக்கும் ஒரு வேறுபாட்டை உருவாக்கி, அவர்களை " பிறப்பால் பிற இனத்தாராய் இருக்க நீங்கள், உங்கள் முன்னைய நிலையை நினைவில் கொள்ளுங்கள். உடலில் கையால் விருத்தசேதனம் செய்து கொண்டவர்கள் உங்களை விருத்தசேதனம் செய்யாதோர் எனக் கூறி இகழ்ந்தார்கள்" (எபே 2:11). இந்த பகுதியில், புனித பவுல், யூதர்களும், பிற இனத்தவர்களும் கடவுளின் பிள்ளைகள் என்ற ஒரே உரிமையைக் கொள்கிறார்கள் என்று அவர்களுக்கு நினைவூட்டுகிறார். அனைவரும் கிறிஸ்துவின் ஒரே உடலின் உறுப்பினர்கள். மேலும், நித்திய வாழ்வுக்கான வாக்குறுதி அனைவருக்கும் உள்ளது. கிறிஸ்துவில் இனி பிளவுகள் இல்லை.

**நற்செய்தி:**
**மத்தேயு 2:1-12**

ஆண்டவரின் திருக்காட்சி, நம் தந்தை கடவுள் தம்மை இயேசு கிறிஸ்து வழியாக வெளிப்படுத்தியதைக் காட்டுகிறது. இந்த வெளிப்பாடு யூதர்களுக்கு மட்டுமல்ல, முழு உலகிற்கும் இருந்தது. ஞானிகள் நட்சத்திர ஆய்வாளர்களாக இருக்கலாம். அவர்கள் ஒரு அசாதாரணமான நட்சத்திரத்தைக் கவனித்தனர். அந்த நட்சத்திரம், பல நாடுகளை ஆட்சி செய்யும் ஒரு அரசனைப் பற்றிய பிலேயாமின் இறைவாக்கைப் பிரதிபலிக்கிறது (எண் 24:17). ஏரோதின் ஆலோசகர்கள், தாவீது அரசனின் நகரமான பெத்லகேமில் இருந்து ஒரு தலைவர் வருவார் என்ற இறைவாக்குகளை மேற்கோள் காட்டினர் (மீகா 5:2). இந்த அரசர் இயேசு. மேலும், அவருக்கு மரியாதை செலுத்துவதன் மூலம், ஞானிகள் இயேசு கிறிஸ்துவை தங்கள் அரசராக ஏற்றுக்கொண்டனர்..

## சிந்தனைகள்

*மற்றொருவர் இந்த பகுதியை வாசிக்க வேண்டும். இது வாரத்தின் வாசகங்கள் குறித்த நமது சிந்தனைகளை ஆழப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது. சிந்தனைக்கு போதுமான நேரம் அளிக்கப்பட வேண்டும்*

இன்றைய திருவிழா, கிரேக்க வார்த்தையான "எபிபானி" என்பதிலிருந்து வந்த "வெளிப்பாடு" என்று அழைக்கப்படுகிறது. நம் தந்தை கடவுள் தம்மை இயேசு கிறிஸ்துவில் அனைத்து மக்களுக்கும் வெளிப்படுத்தியதை நாம் கொண்டாடுகிறோம். இந்த நற்செய்தி நிகழ்வு 2,000 ஆண்டுகளுக்கு முன்பு நடந்திருந்தாலும், மனிதகுலத்திற்கு நம் தந்தை கடவுளின் வெளிப்பாடு தொடர்கிறது. இன்று, குழந்தை இயேசுவைத் தேடும் கிழக்கிலிருந்து வரும் ஞானிகள் நமக்கு இல்லை. அதற்கு பதிலாக, நாம் கிறிஸ்தவர்களாக, அனைவருக்கும் நற்செய்தியைக் கொண்டு செல்லும் "நட்சத்திரங்களாக" இருக்க வேண்டும் என்று இயேசு நமக்கு கட்டளையிடுகிறார் (மத் 28:19). எனவே, திருச்சபை தன்னுடைய தொடக்க நாளிலிருந்தே மறைபரப்பிக் கொண்டிருக்கிறது, ஏனெனில் அது மகனின் மறைபரப்பிலிருந்து வந்தது".

*நாம் நம்மை நாமே கேட்டுக்கொள்வோம்: நமது திருஅவையின் தொண்டூழியர்கள், குடும்பங்கள் மற்றும் சமூகங்கள் இந்த மறைபரப்பு உண்மையை எவ்வாறு கடைபிடிக்கிறோம்?*

• நமது பங்கு ஆலயங்கள், தங்கள் எல்லைகளுக்குள் உள்ள அனைத்து ஆன்மாக்களுக்கும் (கிறிஸ்தவர்கள் அல்லது மற்றவர்கள்) நற்செய்தி அறிவிப்பதற்குப் பொறுப்பானவை. அனைத்து பங்கு திருஅவையின் தொண்டூழியர்கள் இந்த நோக்கத்தை ஆதரிக்க வேண்டும். நாம் வெறும் செயல்பாடுகள் அல்லது தற்போதைய நிலையுடன் திருப்தியடைவதை விட, மறைபரப்புக்கு முன்னுரிமை கொடுப்போம்.

• குடும்பங்கள் நற்செய்தியை வெளிப்படையாக அறிவிக்க வேண்டும். பெற்றோரே, விசுவாசத்திற்கு வாழும் உதாரணங்களாக இருங்கள்: ஒன்றாக செபிக்கவும், விவிலியத்தைப் படிக்கவும் நேரங்களை உருவாக்குங்கள். விருந்தோம்பலை கடைப்பிடிக்கவும், ஒருவரையொருவர் சமாதானமாக வாழவும் முயற்சி செய்யுங்கள் (உரோ 12:18).

• சமூகங்களே, மற்றவர்களுக்குச் சேவை செய்வதில் விரும்பி செயல்படுங்கள். ஒன்றாக சேவை செய்ய வாய்ப்புகளைத் தேடுங்கள் - அது ஒரு சமூக உதவிப்பணி அல்லது முதியவர்களுடன் செல்வது. கூடுதலாக, எப்போதும் கேள்விகளுக்குத் திறந்த மனதுடன் இருங்கள்; சிறிய குழுக்கள், இயேசு கிறிஸ்துவைப் பற்றி ஆர்வமாக இருப்பவர்களுக்கு ஒரு மென்மையான நுழைவாயிலை வழங்குகின்றன.

• நம் சொந்த நவீன கால "நட்சத்திரமாக" மற்றவர்களை இயேசு கிறிஸ்துவிடம் வழிநடத்த, ஒரு உண்மையான மறைபரப்புக் கொண்ட திருச்சபையாக இருக்க, நம் தந்தை கடவுளிடம் அருளுக்காக செபிக்கிறோம். அவருடைய மறைபரப்பு ஊழியர்களாக, நாம் சந்திக்கும் அனைவருக்கும் அவருடைய அன்பை தொடர்ந்து வெளிப்படுத்த செபிக்கிறோம். எசாயா, முதல் வாசகத்தில் இறைவாக்கு உரைத்தது போல, உலகின் நாடுகள் இயேசு கிறிஸ்துவின் ஒளியில் நடக்க ஒன்றுகூடட்டும்.

## பகிர்வதற்கான வினாக்கள்:

*இந்தப் பகுதி தனிப்பட்ட மற்றும் குழுவின் சூழலுக்கு ஏற்ப பகிர்தலுக்காகப் பிரிக்கப்பட்டுள்ளது. குழுப் பகிர்தல், சிறிய கிறிஸ்தவ சமூகங்கள், திருஅவையின் தொண்டூழியர்கள் அல்லது குடும்பம் போன்ற குறிப்பிட்ட சூழல்களின் அடிப்படையில் பகிர்தல்களை ஊக்குவிக்கும் நோக்கம் கொண்டது. இந்த*

### தனிப்பட்ட சிந்தனை மற்றும் பகிர்வதற்கான வினாக்கள்

வினாக்களைப் பற்றி சிந்திக்கவும், ஒவ்வொருவரும் பதிலளிக்கவும் நேரம் கொடுக்கப்பட வேண்டும் கீழே உள்ள வினாக்களைப் பற்றி அனைவரும் அமைதியாகச் சிந்திக்கவும். நீங்கள் ஒரு குழுவில் இருந்தால், உங்கள் சிந்தனைகளைப் பகிர்ந்து கொள்ளலாம். விவிலிய வாசகங்களில் உங்களைத் தாக்கியது என்ன, மேலும் நீங்கள் இறைவார்த்தையை மற்றவர்களுடன் எவ்வாறு பகிரலாம் என்பதைப் பற்றி பேசலாம்

- சமீபத்தில் உங்கள் வாழ்க்கையில் ஒரு "வழிநடத்தும் நட்சத்திரமாக" இருந்தவர் யார் - இயேசுவை ஆழமாகச் சந்திக்க உங்களுக்கு உதவியவர் யார்? அவர்கள் என்ன செய்தார்கள் அல்லது சொன்னார்கள், அது உங்களை எவ்வாறு தாக்கியது?

- இந்த சந்திப்பிலிருந்து நீங்கள் எதனை கற்றுக்கொண்டு, மற்றவர்களுக்கு ஒரு "வழிநடத்தும் நட்சத்திரமாக" மாறியுள்ளீர்கள்?•

### பகிர்வதற்கான வினாக்கள்

உங்கள் சூழலுக்கு ஏற்ப பின்வரும் வினாக்களில் ஒன்றைப் பற்றி சிந்திக்கலாம்

**சிறிய கிறிஸ்தவ சமூகங்களுக்கு**

ஒரு சமூகமாக, நமது உறவுகள், உதவிப்பணி மற்றும் சாட்சிகளில் கிறிஸ்துவின் ஒளியை இன்னும் அதிகமாக பிரதிபலிக்க நமது குழுவுக்கு என்னென்ன வழிகள் உள்ளன?

**திருஅவையின் தொண்டூழியர்களுக்கு**

நமது வேலை, நமது பங்கு ஆலயத்தின் மறைபரப்பு நோக்கத்திற்கு பங்களிப்பதாக நாம் காண்கிறோமா? நமது வேலையில் இந்த நோக்கத்தை முன்னிலைப்படுத்த நாம் எவ்வாறு உறுதிப்படுத்த வேண்டும்?

**குடும்பங்களுக்கு**

ஒரு குடும்பமாக, நமது விரிவுபடுத்தப்பட்ட குடும்பத்திற்கு, குறிப்பாக இன்னும் இயேசு கிறிஸ்துவை அறியாதவர்களுக்கு ஒரு "வழிநடத்தும் நட்சத்திரமாக" இருக்கும் ஒரு விசுவாச பயிற்சி என்ன?

## உங்கள் பங்களிப்பு

இயேசுவின் நற்செய்தியை மற்றவர்களுக்குப் பகிர்ந்துகொள்ள, நீங்கள் மேற்கொள்ளும் முயற்சி.

நீங்கள் குறியீடுகளைக் கொடுத்த அந்த மூன்று நபர்களையும் உங்களுடன் திவ்விய நற்கருணை கொண்டாட்டத்திற்கு அழைக்கவும். கொண்டாட்டங்களிலிருந்து யாரும் விலக்கப்படவில்லை என்பதை அவர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்

## நிறைவுச் செபம்

அமர்வின் முடிவில், அனைவரும் சேர்ந்து செபிப்பார்கள். ஒவ்வொருவரும் பங்கேற்பாளர்களுக்காகவும் பின்னர் சமூகத்திற்காகவும் செபிப்பார்கள்.

அன்புள்ள தந்தையே,

இன்றைய கொண்டாட்டத்தில் உம்முடைய அரசிற்கு மக்களை அழைக்கும்போது எந்த வேறுபாடும் இல்லை என்பதை நீர் எங்களுக்கு நினைவூட்டுகிறீர். அனைவருக்கும் திறந்திருக்கும் இந்த அழைப்பிற்காக நாங்கள் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம். எங்கள் நன்றியுணர்வில், மற்றவர்களையும் அழைக்க நாங்கள் விரும்புகிறோம். ஏனெனில், உம்மிடம் நாங்கள் கொண்டு வரும் யாரையும் நீர் புறக்கணிக்க மாட்டீர் என்பதை நாங்கள் அறிவோம். எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

ஆமென்.

# நமதுசிந்தனை

2025-26 திருவருகைக் காலத்தின் முதல் ஞாயிறு

சிந்தனைப் புத்தகம்



# பின்னிணைப்பு

## திருவருகைக் கால மற்றும் கிறிஸ்து பிறப்பு குறியீடுகள்

திருச்சபையின் ஆரம்ப நாட்களிலிருந்தே, தயாரிப்புக் காலத்திலும், கிறிஸ்து பிறப்பின்போதும், அவற்றின் பொருள் மற்றும் முக்கியத்துவத்தை கிறிஸ்தவர்களுக்குப் புரிந்துகொள்ள உதவுவதற்காக, படங்கள் பயன்படுத்தப்பட்டன. இன்று, நாம் இந்த அடையாளங்களையும் குறியீடுகளையும் அலங்காரங்களின் ஒரு பகுதியாக மட்டுமே பார்க்கப் பழகிவிட்டோம். இந்த சிறிய பட்டியல் அவற்றைப் பற்றி உங்களுக்கு ஒரு பெரிய புரிதலையும், மதிப்பையும் கொண்டுவர உதவும் என்று நம்புகிறோம்!



**ADVENT CANDLES**

நான்கு மெழுகுவர்த்திகளின் நிறங்கள் திருச்சபையின் நாட்காட்டியைப் பின்பற்றுகின்றன: ஊதா நிறம், அறிமுகக் காலத்தில் மனவருத்தத்தையும், எதிர்பார்ப்பையும் குறிக்கிறது, மேலும் இளஞ்சிவப்பு நிறம் மகிழ்ச்சியின் ஞாயிறைக் குறிக்கிறது. இந்த மெழுகுவர்த்திகள், கிறிஸ்து பிறப்பை நோக்கி நாம் செல்லும்போது, காலம் கடந்து செல்வதைக் குறிக்கின்றன. மேலும், இரவு வெகுதூரம் சென்றுவிட்டது, பகல் நெருங்கிவிட்டது என்பதை நமக்கு நினைவூட்டுகின்றன



**திருவருகைக் கால மலர்வளையம்**

பாரம்பரியமாக எப்போதும் பசுமையாக இருக்கும் கிளைகளால் செய்யப்பட்டது, இது நம்பிக்கையையும், வாழ்க்கையையும் குறிக்கிறது. இந்த கிளைகள் ஒரு வட்டத்தில் அமைக்கப்பட்டுள்ளன. அது, நித்திய வாழ்வை குறிக்கும் ஒரு இடைவிடாத வடிவம். இது கடவுளின் அன்பிற்கு முடிவில்லை என்பதையும், அவருடைய வாக்குறுதி உறுதியானது என்பதையும் நமக்கு நினைவூட்டுகிறது.



**கிறிஸ்துமஸ் மரம்**

பைன் மரம், குளிர் நிறைந்த காலங்களில் பல தாவரங்கள் இலைகளை இழக்கும் நேரத்தில், குளிர் காலத்திலும் பசுமையாக இருக்கும் மரம். பைன் மரம் இவ்வாறு, பாவம் மற்றும் மரணம் நிறைந்த சூழ்நிலையிலும், கிறிஸ்துவின் நித்திய வாழ்வுக்கான வாக்குறுதியைக் குறிக்கிறது. இது நமக்குள்ளே அவருடைய வாழ்க்கை நிலையானது மற்றும் மங்காதது என்பதை நினைவூட்டுகிறது.



**பூச்செடிகள்**

மெக்ஸிகோவை பூர்விகமாகக் கொண்ட இந்த பூக்கள், கிறிஸ்து பிறப்பு காலத்தில் பூக்கின்றன. நட்சத்திர வடிவிலான இலை அமைப்பு பெத்லகேமின் நட்சத்திரத்தைக் குறிக்கிறது. அதே சமயம், சிவப்பு பூக்கள் இயேசு சிலுவையில் சிந்திய இரத்தத்தைக் குறிக்கின்றன. அவருடைய பிறப்பின்போதே, அவர் நம்மை மீட்கப்போகும் தியாகத்தை குறிக்கிறது.



**சான்டா கிளாஸ்**

சான்டா கிளாஸ்" என்ற பெயர், டச்சு மொழியில் சின்டர்கிளாஸ் என்று அழைக்கப்படும் மிரா நகர புனித நிக்கோலஸின் பெயரின் மொழிபெயர்ப்பு ஆகும். அவரது திருவிழாவான, டிசம்பர் 6-ஆம் தேதி நெதர்லாந்து, மக்கள் நீண்ட வெள்ளை முடி மற்றும் தாடியுடன், சிவப்பு அங்கியுடன் ஒரு வயதான மனிதரைப் போல உடை அணிந்து கொண்டாடி மகிழ்கிறார்கள். அமெரிக்காவிற்கு குடியேறியவர்கள் அங்கும் கொண்டு வந்தனர், அங்கு அது கிறிஸ்து பிறப்பு கொண்டாட்டத்துடன் இணைந்தது. புனித நிக்கோலஸ் அவருடைய தாராள மனப்பான்மை மற்றும் ஏழைகளின் மீதான அக்கறைக்காக நினைவுகூறப்படுகிறார். இது, கிறிஸ்துவின் அன்பு, தன்னையே கொடுப்பதில் எவ்வாறு வெளிப்படுகிறது என்பதைக் காட்டுகிறது.



**பெத்லகேமின் நட்சத்திரம்**

ஒரு கிறிஸ்து பிறப்பு மரத்தின் உச்சியில் பெரும்பாலும் காணப்படும். இது கிழக்கிலிருந்து வந்த ஞானிகளை குழந்தை இயேசுவிடம் வழிநடத்திய நட்சத்திரத்தை நமக்கு நினைவூட்டுகிறது. இது கொண்டாட்டத்திற்கான காரணத்தை நினைவூட்டுகிறது: கடவுளே மனித உருவெடுத்து நம்மில் வாழ்ந்தார். மற்றவர்களை கிறிஸ்துவிடம் வழிநடத்த நாம் அந்த நட்சத்திரமாக இருக்க அழைக்கப்படுகிறோம்.



# அட்வென்ட் மாலை கொண்டு ஜெபித்தல்

அட்வென்ட் மாலையின் குறியீடானது, ஒளியும் இருளும் சந்திக்கும் நிலையில், உலகின் ஒளியாகிய மீட்பரின் வருகைக்காகக் காத்திருப்பதில் அடங்கியுள்ளது. ஒவ்வொரு வாரமும் படிப்படியாக மெழுகுவர்த்திகளை ஏற்றுவது, நம் ஆண்டவரின் உலகின்மீதான முதல் வருகை குறித்த எதிர்பார்ப்பையும், நம்பிக்கையையும் குறிக்கிறது. அத்துடன், வாழ்வோர் மற்றும் இறந்தவர்களை நியாயந்தீர்க்க அவர் இரண்டாம் முறை வரவிருப்பதற்கான முன்னறிவிப்பையும் (Anticipation) இது உணர்த்துகிறது. ஒவ்வொரு வாரமும் மெழுகுவர்த்தி ஏற்றப்படும்போது, இயேசு கிறிஸ்துவே உலகின் ஒளி என்றும், அவர் இருளை வென்றுவிட்டார் என்றும் நமக்கு நினைவூட்டப்படுவதால், ஒளி அதிகரிக்கிறது, இருள் குறைகிறது.

*(அட்வென்ட் மாலையின் நான்கு வார ஜெபங்களும் கத்தோலிக்க குடும்ப ஆசீர்வாதங்கள் மற்றும் ஜெபங்கள் (NCCB, 1988) என்ற நூலில் இருந்து தழுவி எடுக்கப்பட்டவை ஆகும்.)*

## திருவருகைக் காலம் முதல் வாரம்

*தலைவர் கூறும் பொழுது, அனைவரும் சிலுவை அடையாளத்தை வரைக.:*

தலைவர் : நமக்கு உதவி எங்கு இருந்து வரும் .

பதில் : விண்ணையும் மண்ணையும் படைத்த ஆண்டவரின் பெயரால் வரும் .

*வாசகம் வாசிக்கப்படும்*

**எசாயா 9:1-2**

'காரிருளில் நடந்துவந்த மக்கள் பேரொளியைக் கண்டார்கள்; சாவின் நிழல் சூழ்ந்துள்ள நாட்டில் குடியிருப்போர்மேல் சுடர் ஒளி உதித்துள்ளது..ஆண்டவரே! அந்த இனத்தாரைப் பல்கிப் பெருகச் செய்தீர்; அவர்கள் மகிழ்ச்சியை மிகுதிப்படுத்தினீர்; அறுவடை நாளில் மகிழ்ச்சியுறுவது போல் உம் திருமுன் அவர்கள் அகமகிழ்கிறார்கள்; கொள்ளைப் பொருளைப் பங்கிடும் போது அக்களிப்பதுபோல் களிகூர்கிறார்கள்'

**READER:** இது ஆண்டவரின் அருள்வாக்கு.

**RESPONSE:** இறைவனுக்கு நன்றி .

சிறிய இடைவெளிக்கு பின் அனைவரும் கர்த்தர் கற்பித்த ஜெபத்தை சொல்லுவோம் அதன்பின் தலைவர் ஜெபத்தை முன்னெடுப்பார் :

தலைவர் : இப்பொழுது, நம்மீதும் இந்த மாலைமீதும் கடவுளின் ஆசீர்வாதத்திற்காக ஜெபிப்போம் தலைவர் : ஆண்டவராகிய எங்கள் கடவுளே, உம்முடைய திருமகனாகிய இயேசு கிறிஸ்துவுக்காக உமக்குப் புகழ் கூறுகிறோம்: அவரே இம்மானுவேல், மக்களின் நம்பிக்கை; அவரே எங்களுக்குக் கற்பிக்கும், வழிநடத்தும் ஞானம்; அவரே ஒவ்வொரு இனத்தின் மீட்பர். ஆண்டவராகிய கடவுளே, இந்த மாலையில் உள்ள மெழுகுவர்த்திகளை நாங்கள் ஏற்றும்போது, உம்முடைய ஆசீர்வாதம் எங்கள்மீது பொழிவதாக. இந்த மாலையும் இதன் ஒளியும் எங்களுக்கு மீட்பைக் கொண்டுவருவதாக கிறிஸ்து அளித்த வாக்குறுதியின் அடையாளமாக இருக்கட்டும்.அவர் விரைந்து வந்து, தாமதிக்காமல் இருக்கட்டும்.

தலைவர் : எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம்..

பதில் : ஆமென்

*அதன்பின் முதல் ஊதா நிற மெழுகுவர்த்தி ஏற்றப்படுகிறது..*

தலைவர் : ஆண்டவர் நம் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக

பதில் : இறைவனுக்கு நன்றி.

*ஓ வாரும், ஓ வாரும், இம்மானுவேலே" என்ற கிறிஸ்தவப் பாடல் வரிகளுடன் இந்த ஆசீர்வாதம் முடிவடையலாம்.*

: அனைவரும் : ஓ! இனங்களின் விருப்பமானவரே வாரும், மானிடத்தின் இதயங்களை ஒன்றாய் இணைத்திட வாரும்; வருத்தும் பிளவுகள் யாவையும் நிறுத்தி, சமாதான இளவரசராக நீரே விளங்கிட வாரும்.மகிழுங்கள்! மகிழுங்கள்! இம்மானுவேல் உன்னிடம் வருவார், ஓ இஸ்ரயேலே!

## திருவருகைக் காலம் இரண்டாம் வாரம்

*தலைவர் கூறும் பொழுது, முதல் மற்றும் இரண்டாம் ஊதா நிற மெழுகுவர்த்திகள் ஏற்றப்படுகின்றன*

**தலைவர் :** சர்வ சிருஷ்டிக்கும் ஆண்டவராகிய கடவுளே, இருளிலும் ஒளியிலும் உமக்கு ஆசீர் உண்டாவதாக. நம்முடைய மீட்பராகிய இயேசு கிறிஸ்துவின் வருகைக்காக மகிழ்ச்சியுள்ள நம்பிக்கையில் நாங்கள் காத்திருக்கும்பொழுது, உமக்கு ஆசீர் உண்டாவதாக!.

**பதில் :** ஏனெனில் அரசும், வல்லமையும், மாட்சியும் என்றென்றும் உமக்கே உரியன

**தலைவர் :** ஆண்டவர் இயேசுவே வாரும்

**பதில் :** விரைந்து வாரும் !

**தலைவர் :** நம்முடைய மீட்பராகிய இயேசு கிறிஸ்துவின் வருகைக்காக மகிழ்ச்சியுள்ள நம்பிக்கையுடன் நாங்கள் காத்திருக்கும்போது, இந்த உலகில் நிதானத்துடனும், நீதியுடனும், பக்தியுடனும் வாழுவோம்.

**பதில் :** ஏனெனில் அரசும், வல்லமையும், மாட்சியும் இன்றும் என்றும் உமக்கே உரியன

## திருவருகைக் காலம் மூன்றாம் வாரம்

*தலைவர் கூறும் பொழுது, முதல் மற்றும் இரண்டாம் ஊதா நிற மெழுகுவர்த்திகளும், அத்துடன் இளஞ்சிவப்பு மெழுகுவர்த்தியும் ஏற்றப்படுகின்றன.*

**தலைவர் :** சர்வ சிருஷ்டிக்கும் ஆண்டவராகிய கடவுளே, இருளிலும் ஒளியிலும் உமக்கு ஆசீர் உண்டாவதாக. நம்முடைய மீட்பராகிய இயேசு கிறிஸ்துவின் வருகைக்காக மகிழ்ச்சியுள்ள நம்பிக்கையில் நாங்கள் காத்திருக்கும்பொழுது, உமக்கு ஆசீர் உண்டாவதாக!.

**பதில் :** ஏனெனில் அரசும், வல்லமையும், மாட்சியும் என்றென்றும் உமக்கே உரியன

**தலைவர் :** ஆண்டவர் இயேசுவே வாரும்

**பதில் :** விரைந்து வாரும் !

**தலைவர் :** நம்முடைய மீட்பராகிய இயேசு கிறிஸ்துவின் வருகைக்காக மகிழ்ச்சியுள்ள நம்பிக்கையுடன் நாங்கள் காத்திருக்கும்போது, இந்த உலகில் நிதானத்துடனும், நீதியுடனும், பக்தியுடனும் வாழுவோம்.

**பதில் :** ஏனெனில் அரசும், வல்லமையும், மாட்சியும் இன்றும் என்றும் உமக்கே உரியன

### திருவருகைக் காலம் நான்காம் வாரம்

*தலைவர் கூறும் பொழுது, முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் ஊதா நிற மெழுகுவர்த்திகளும், அத்துடன் இளஞ்சிவப்பு மெழுகுவர்த்தியும் ஏற்றப்படுகின்றன:*

**தலைவர் :** சர்வ சிருஷ்டிக்கும் ஆண்டவராகிய கடவுளே, இருளிலும் ஒளியிலும் உமக்கு ஆசீர் உண்டாவதாக. நம்முடைய மீட்பராகிய இயேசு கிறிஸ்துவின் வருகைக்காக மகிழ்ச்சியுள்ள நம்பிக்கையில் நாங்கள் காத்திருக்கும்பொழுது, உமக்கு ஆசீர் உண்டாவதாக!.

**பதில் :** ஏனெனில் அரசும், வல்லமையும், மாட்சியும் என்றென்றும் உமக்கே உரியன

**தலைவர் :** ஆண்டவர் இயேசுவே வாரும்

**பதில் :** விரைந்து வாரும் !

**தலைவர் :** நம்முடைய மீட்பராகிய இயேசு கிறிஸ்துவின் வருகைக்காக மகிழ்ச்சியுள்ள நம்பிக்கையுடன் நாங்கள் காத்திருக்கும்போது, இந்த உலகில் நிதானத்துடனும், நீதியுடனும், பக்தியுடனும் வாழுவோம்.

**பதில் :** ஏனெனில் அரசும், வல்லமையும், மாட்சியும் இன்றும் என்றும் உமக்கே உரியன

### *கிறிஸ்துமஸ் இரவு அல்லது கிறிஸ்துமஸ் நாள்*

**தலைவர் :** நாம் நம்முடைய கிறிஸ்துமஸ் கொண்டாட்டத்தின், அதாவது இயேசுவின் பிறந்தநாளின், திருவிழா இரவுக்கு வந்துவிட்டோம். அல்லது: இன்று, நாம் இயேசுவின் பிறந்தநாளைக் கொண்டாடுகிறோம்.அவருடைய வருகைக்காக நாம் நீண்ட நாட்களாகத் தயாரித்து வந்தோம். அவருடைய வருகையை முன்னறிவித்த தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளைக் கேட்போம்.

**வாசகர் 1:** இருளில் நடந்த மக்கள் பேரொளியைக் கண்டார்கள்; ஆழ்ந்த இருள் சூழ்ந்த நாட்டில் வாழ்ந்தோர்மீது ஒளி வீசியது..

**வாசகர் 2:** ஏனெனில் நமக்கு ஒரு குழந்தை பிறந்துள்ளது; நமக்கு ஒரு மகன் கொடுக்கப்பட்டுள்ளார்; ஆட்சிப் பொறுப்பு அவர் தோள்மேல் இருக்கும்; மேலும் அவருக்கு அதிசயமான ஆலோசகர், வல்லமையுள்ள கடவுள், நித்திய தந்தை, சமாதான இளவரசர் என்று பெயரிடப்படுவார்.

**வாசகர் 3:** யூதா நாட்டிலுள்ள பெத்லகேமே, யூதாவின் ஆட்சியாளர்களுள் நீ சிறியவன் அல்ல; ஏனெனில் என் மக்களாகிய இஸ்ரயேலை மேய்க்கப்போகும் ஓர் ஆட்சியாளர் உன்னிடமிருந்தே வெளிப்படுவார்.

**தலைவர் :** இன்று, இந்த வாக்குறுதிகள் அனைத்தின் நிறைவேறுதலையும் நாம் கொண்டாடுகிறோம். "இன்று தாவீதின் ஊரிலே உங்களுக்கு ஒரு மீட்பர் பிறந்திருக்கிறார்; அவரே ஆண்டவராகிய மெசியா" என்று திருமறைப் பிரகடனம் செய்கிறது. எனவே, நாம் அட்வென்ட் மாலையின் அனைத்து மெழுகுவர்த்திகளையும் ஏற்றுகிறோம்

*முதலில்*

*முதலில், இயேசுவே நம் நம்பிக்கை என்பதால், நம்பிக்கைக்குரிய மெழுகுவர்த்தியை ஏற்றுகிறோம். (முதல் ஊதா மெழுகுவர்த்தி ஏற்றப்படுகிறது)*

*இரண்டாவது,*

*இரண்டாவதாக, இயேசுவே நம் நம்பிக்கையும் சமாதானமும் என்பதால், சமாதானத்திற்குரிய மெழுகுவர்த்தியை ஏற்றுகிறோம். (இரண்டாம் ஊதா மெழுகுவர்த்தி ஏற்றப்படுகிறது)*

*மூன்றாவது,*

*மூன்றாவதாக, இயேசு மகிழ்ச்சியைக் கொண்டுவருவதால், மகிழ்ச்சிக்குரிய மெழுகுவர்த்தியை ஏற்றுகிறோம். (இளஞ்சிவப்பு மெழுகுவர்த்தி ஏற்றப்படுகிறது)*

*நான்காவது,*

*நான்காவதாக, இயேசுவே அன்பாக இருப்பதால், அன்புக்குரிய மெழுகுவர்த்தியை ஏற்றுகிறோம். (மூன்றாம் ஊதா மெழுகுவர்த்தி ஏற்றப்படுகிறது)*

*இறுதியாக*

*இறுதியாக, மைய மெழுகுவர்த்தியை ஏற்றுகிறோம். இதுவே கிறிஸ்து மெழுகுவர்த்தி ஆகும். இயேசு பிறந்ததைக் கொண்டாட இந்த மெழுகுவர்த்தியை ஏற்றுகிறோம். அவர் என்றென்றும் நம் வாழ்வில் வந்திருக்கிறார். (வெள்ளை மெழுகுவர்த்தி ஏற்றப்படுகிறது)*

**தலைவர் :** அன்புள்ள தந்தையே,
உம்முடைய திருமகனாகிய இயேசு கிறிஸ்து என்னும் உன்னதப் பெரும் கொடைக்காக உமக்கு நன்றி கூறுகிறோம்.அன்பின் கடவுளே, அனைத்தின் தந்தையே, பூமியை மூடியிருந்த இருளானது,மனுவுரு எடுத்த உமது வார்த்தையின் பிரகாசமான விடியலுக்கு வழிவிட்டு நீங்கியது.எங்களை இந்த ஒளிக்குரிய மக்களாக மாற்றுவீராக.காத்திருக்கும் உலகிற்கு உமது வாழ்வை நாங்கள் கொண்டுபோகும் பொருட்டு, உமது வார்த்தைக்கு நாங்கள் உண்மை உள்ளவர்களாக இருக்கச் செய்தருளும். எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக இவற்றை உம்மிடம் மன்றாடுகிறோம்.

**பதில் : ஆமென் .**

# நன்றியுரை


**எழுத்து மற்றும் தொகுப்பு குழு:**

ஆக்னஸ் ங்கோ

பெஞ்சமின் டான்

செரில் சிம்

ஜென்னி ஆங்

ஜெர்விஸ் காங்

அருள் தந்தை பாத்தலோ மரிய சி.டி

அருள் தந்தைஸ்டான்லி கோ எஸ்.ஜே

அருள் தந்தைடெரன்ஸ் பெரேரா

சகோதரி பியோனா யோ

**மொழிபெயர்ப்புகள்**

சிங்கப்பூர் உயர் மறைமாவட்ட மாண்டரின் ஆணையம் (ACAMS)

சிங்கப்பூர் உயர் மறைமாவட்ட தமிழ் ஆணையம்(ACTS)

***வடிவமைப்பாளர்***

ரே சியா



*இந்த தயாரிப்பு, குடும்பங்கள், திருமுழுக்குத் தயாரிப்புக் குழுக்கள் (RCIA), பங்கு அமைப்புகள் மற்றும் பணிக்குழுக்கள், சிறிய கிறிஸ்தவச் சமூகங்கள், அத்துடன் கிறிஸ்தவச் சமூகங்கள் ஆகியோருக்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. இது தனிப்பட்ட ஆழ்ந்த சிந்தனைக்காகவும் பயன்படுத்தப்படலாம்..*

கடவுளின் வார்த்தையைக் கேட்கவும், அதன்படி வாழவும் அல்லது செயல்படுத்தவும் கூடிய இடமாக, அக்கம் பக்க கிறிஸ்தவச் சமூகத்தை மேம்படுத்துவது.

அண்டை அயலாருக்கும், தேவையில் உள்ளவர்களுக்கும் உதவிக்கரம் நீட்டுவதன் மூலம், பங்கேற்பாளர்களுக்குச் சமூகத்தின் ஓர் அனுபவத்தையும், தங்கள் பணி குறித்த உணர்வையும் வழங்குவதே இதன் நோக்கம்.

பங்கு அமைப்புகள்/பணிக்குழுக்கள் அனைத்தையும் ஒருங்கிணைத்து, ஒன்றாக இணைந்து ஜெபிக்கச் செய்வதும், அதன் மூலம் கிறிஸ்துவை மீண்டும் மையத்தில் வைப்பதும் இதன் நோக்கம் ஆகும்.

குடும்ப உறுப்பினர்களிடையே தொடர்பை (அல்லது பகிர்வறிவை) அதிகரிப்பது. அனைத்துப் பகிர்வுகளிலும் அன்பு பிரதானச் செய்தியாக இருக்க வேண்டும். எனவே, அமர்வுகள் (sessions) குடும்பங்கள் கதைகளைப் பகிர்தல், அர்த்தமுள்ள செயல்களை ஒன்றாகச் செய்தல், விசுவாசத்தைப் பகிர்ந்துகொள்ளுதல், மற்றும் ஒருவருக்கொருவர் சமாதானமடைதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளன.

ONE Resource

one.org.sg
enquiries.one@catholic.org.sg

Catholic Archdiocesan Education Centre
2 Highland Road #02-19 S(549102)

© 2025. Office for the New Evangelisation. The Titular Roman Catholic Archbishop of Singapore. All Rights Reserved.